பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ மாசி மீ 29-ம் உ | செவ்வாய்க்கிழமை | (13 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 15 | ஓசை 23

## வடக்குக் - கிழக்கு மாகாண சபை ஜனாதிபதியின் நேரடிப்பொறுப்பில்?

வடக்குக் - கிழக்கு மாகாண சபையைக் கலைக்காமலும் முதலமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்யாமலும் வரதராஜப்பெருமாள் மர்மமாக மறைந்திருப்பதாலும் மாகாண சபை செயலிழந்திருப்பதாலும் வடக்குக் கிழக்கு மாகாண சபை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தமது நேரடி நிர்வாகத்தி கீழ் கொண்டு வருவதைத் தவிர வேறுவழியில்லை என்று சட்ட நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி பிரேமதாசா இப்படி வடக்குக் கிழக்கு மாகாணசபையின் நிர்வாகத்தை நேரடியாகத் தமது பொறுப்பில் எடுத்துக்கொண்டால், இப்பொழுது வடக்குக் கிழக்கில் பெரும்பான்மையான இடங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு திருகோணமலையில் ஈ. பி. ஆர். எல். எவ். குழுவினரும் இந்திய இராணுவமும் உள்ள சிறிய இடத்தைச் சுற்றிவளைத்துள்ள விடுதலைப் புலிகள் விரும்பமாட்டார்கள் என்றும் பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

# இழப்புக்களின் பின்பும் மக்கள் எம்மோடு உள்ளனர்

- மகேந்திரராசா

(மன்னார்)

"போராளி எனப்படுபவர் ஓர் இனத்தின் ஓர் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்பவனாக இருப்பவன் ஆனாலும் எமது பிரதேசத்தில் நீங்கள் பல இழப்புக்களைச் சுமந் பின்பும் எம்மோடு உறுதுணையாக நிற்கின்றீர்கள்" என நேற்றுமாலை அடம்பன் பொது மைதானத்தில் நடந்த விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொதுக் கூட்டத்தில் பேசியதலைவர் திரு. கோ. மகேந்திரராசா தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், எமது பணி தற்பொழுது மேலும் ஒருபடி உயர்ந்துள்



ளது. அரசியற் கட்சியாக இப்பொழுது தங்கள் முன் வந்துள்ளோம். கடந்த நெருக்கடியான காலத்தில் நீங்கள் எங்களுக்கு உதவியது போன்று எதிர்காலத்திலும் உறுதுணையாக இருந்து உதவ வேண்

மையுரை நிகழ்த்துப்போது, எமது மண் இரத்தத்தாலும், கண்ணீராலும் தோய்ந்த ஒன்றுதான். அதன் பணி தற்பொழுது இடைக்காலத் தீர்வொன்று ஏற்பட்டுள்ளது. எமது மண்ணின் இறைமையைக் காப்பாற்ற விடுதலைப் புலிகள் உள்ளார்கள். அதனை நிறைவேற்ற மக்கள் அவர்கள் பின் அணிதிரள வேண்டும் என்றும் தெரிவித்தார். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் (யோகரட்னம்) யோகி

பேசுகையில், இந்திய இராணுவம் எம்மைப் பாதுகாக்க வரவில்லை. அது தமிழீழத்தை ஓர் பயிற்சிக் களமாகவே பயன்படுத்தியுள்ளது. புதிய ஆயுதங்களையும், யுத்த முறைகளையும் இங்கு பயன்படுத்தி அதன் விளைவுகளை ஆராய்ந்தது. தமது பயிற்சிக்காக பல மக்களை அழித்தொழித்தது என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்



குழு உறுப்பினர் காசி ஆனந்தன் பேசுகையில் விடுதலைப் புலிகள் வேரில் முளைத்த தளிர்கள் எனக்குறிப்பிட்டார்

புலிகள் சுழுத்தில் சைனைட் கட்டியவர்கள் சுயநலமில்லாதவர்களே இதனால் மக்கள் அவர்களை நம்புகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

பிரசைகள் குழுத் தலைவர் ஞானசோதி பேசுகையில் பழைய தலைவர்கள்விட்ட தவறுகளைச் சுட்டிக்காட்டியதோடு புலிகள் பின்னால் மக்கள் அணிதிரள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர் மாரிசன் பேசுகையில் எந்த ஒரு இனவாத அரசோ அந்நிய படைகளோ அதன் அடிவருடிகளோ மக்களை கொல்லலாம் போராளிகளைக் கொல்லலாம் ஆனால் போராட்டத்தை அழிக்கமுடியாது என்றும் தெரிவித்தார்.

## "87 முதல் 89 வரை சோலை வரி அறவிடக் கூடாது"

(பண்டத்தரிப்பு)

உடமைகள் அழிக்கப்பட்டு, வருமானமும் இன்றி, மக்கள் பரிதாபகரமான வாழ்க்கை வாழ்ந்த 1987, 1988, 1989, ம் ஆண்டுக்கான சோலைவரியை இரத்துச் செய்ய வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை வலிதென்மேற்கு பிரேதச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பிரதேச வரி இறுப்பாளர் சங்கம் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது. இக்கோரிக்கை உள்ளூராட்சி ஆணையாளர், யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வலி தெற் மேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பப்படுகிறது.

சங்கத் தலைவர் திரு. ஏ, ரி. துரையப்பா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஒரிஸாவில் தங்க அனுமதித்தது மனித நேயத்திலாம்

(நியூடெல்கி)

ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகப் புகலிடம் நாடி வந்தவர்களை இந்தியா மனிதநேய அடிப்படையில் ஒரிசாவில் தங்க அனுமதிக்குள்ளதாக நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவா தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இதுவரை 1600 பேர் திருகோணமலையிலிருந்து கடல் மார்க்கமாகவும் விமானமூலமாகவும் இந்தியா வந்துள்ளார்கள் என்றும் அவர்கள் ஒரியாவில் கொறாக்பூரில் தங்கியுள்ளார்கள் என்றும், சம்பந்தப்பட்ட அரசாங்கத்துடன் கலந்து ஆலோசித்த பிறகு அவர்கள் ஒரிஸாவில் ஏனைய இடங்களில் குடியேற்றப்படுவார்கள் என்றார்.

ஸ்ரீலங்கா அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தியாவில் தங்கியிருக்கும் போராளிக்குழுக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் சூழ்நிலையை ஏற்படுத்தியதும், அவர்களை இந்தியா ஸ்ரீலங்காவுக்கு திருப்பி அனுப்பும் என்றும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

## தனியார் கள், சாராய விற்பனை தடை

(யாழ்ப்பாணம்)

நேற் காலை மனோகரா தியேட்டரில் நடைபெற்ற தெங்கு பனம்பொருள் உற்பத்தியாளர் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளால் சில பொது முன்னோடி அறிவுறுத்தல்கள் விதிக்கப்பட்டது.

அவை வருமாறு

★ லோவைன் விற்பனை முற்றாக தடைசெய்யப் படல் வேண்டும் இது மீறுமிடத்து அச்சங்கத்தின் தலைவரும் பொது முகாமையாளருமே முழுப்பொறுப்பாவார்.

★ சட்டவிரோத தனியார் சள், சாரய விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.

★ சங்க அங்கத்தவர்கள் அல்லாதோர் உடனடியாக சங்கத்தில் அங்கத்தவர்களாக சேர வேண்டும் சேராதோர்

## நினைவு தூபி திறப்பு

(யாழ்ப்பாணம்)

பெண் போராளிகளான

## அமைதிப்படை கைது செய்த கிராமசேவையாளர் எங்கே?

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில்

வடமராட்சிகிழக்கில் உள்ள போக்குறுப்பு கிராம சேவை

யப்பட்டு மருதங்கேணியிலிருந்த இந்திய அமைதிப்படை

எமது பணி தற்பொழுது மேலும் ஒருபடி உயர்ந்துள்



ளது. அரசியற் கட்சியாக இப்பொழுது தங்கள் முன் வந்துள்ளோம். கடந்த நெருக்கடியான காலத்தில் நீங்கள் எங்களுக்கு உதவியது போன்று எதிர்காலத்திலும் உறுதுணையாக இருந்து உதவ வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் சுரேஷ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் சுரேஷ் தலை

எமது மண் இரத்தத்தாலும், கண்ணீராலும் தோய்ந்த ஒன்றுதான். அதன் பணி தற்பொழுது இடைக்காலத் தீர்வொன்று ஏற்பட்டுள்ளது. எமது மண்ணின் இறைமையைக் காப்பாற்ற விடுதலைப் புலிகள் உள்ளார்கள். அதனை நிறைவேற்ற மக்கள் அவர்கள் பின் அணிதிரள வேண்டும் என்றும் தெரிவித்தார். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் (யோகரட்னம்) யோகி

வம் எம்மைப் பாதுகாக்க வரவில்லை. அது தமிழீழத்தை ஓர் பயிற்சிக் களமாகவே பயன்படுத்தியுள்ளது. புதிய ஆயுதங்களையும், யுத்த முறைகளையும் இங்கு பயன்படுத்தி அதன் விளைவுகளை ஆராய்ந்தது. தமது பயிற்சிக்காக பல மக்களை அழித்தொழித்தது என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்



குழு உறுப்பினர் காசி ஆனந்தன் பேசுகையில் விடுதலைப் புலிகள் வேரில் முளைத்த தளிர்கள் எனக்குறிப்பிட்டார்

# அமைதிப்படை கைது செய்த கிராமசேவையாளர் எங்கே?

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் இரண்டரை வருடங்களுக்கு முன்னர் இந்திய அமைதிப் படையினரால் கைது செய்யப்பட்ட கிராம சேவையாளர் இன்னமும் வீடு திரும்பவில்லை.

அவருக்கு என்ன நடந்தது, அவர் எங்கே இருக்கிறார் என அவரது பெற்றோர்கள் உறவினர்கள் தெரியாத நிலையில் உள்ளார்கள்.

வடமராட்சி கிழக்கில் உள்ள போக்கறுப்பு கிராம சேவையாளர் நடராசா பழனிநாதன் என்பவரே இரண்டரை வருடங்களுக்கு முன் இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டவராவார்.

கிராம சேவையாளர் பழனிநாதனும், அவரது தந்தையார் நடராசாவும் வெற்றிலைக்கேணியில் உள்ள அவர்களது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டு மருதங்கேணியிலிருந்த இந்திய அமைதிப்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு தாக்கப்பட்டார்கள்.

மறுநாள் கிராம சேவையாளரின் தந்தையார் வாகனமொன்றில் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

கிராம சேவையாளரைப் பார்ப்பதற்கு பெற்றோர்கள் அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் மூலமாக எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை.

தற்போது இந்திய அமைதிப் படையினரின் பாதுகாப்பில் உள்ளவர்கள் விடுதலை செய்யப்பெற்ற போதும், கிராம சேவையாளர் பழனிநாதன் விடுவிக்கப்படவில்லை. (36)

தெரிவித்தார்.

# தனியார் கள், சாராய விற்பனை தடை

(யாழ்ப்பாணம்)

நேற்று காலை மனோகரா தியேட்டரில் நடைபெற்ற தெங்கு பனம்பொருள் உற்பத்தியாளர் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளால் சில பொது முன்னோடி அறிவுறுத்தல்கள் விதிக்கப்பட்டது.

அவை வருமாறு

★ லோவைன் விற்பனை முற்றாக தடைசெய்யப் படல் வேண்டும் இது மீறுமிடத்து அச்சங்கத்தின் தலைவரும் பொது முகாமையாளருமே முழுப்பொறுப்பாவார்.

★ சட்டவிரோத தனியார் கள், சாராய விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.

★ சங்க அங்கத்தவர்கள் அல்லாதோர் உடனடியாக சங்கத்தில் அங்கத்தவர்களாக சேர வேண்டும் சேராதோர் உற்பத்தி விற்பனையில் ஈடுபட முடியாது.

★ கசிப்பு உற்பத்தி விற்பனை உடனடியாக தடை செய்யப்படுகிறது.

★ நாட்டில் உள்ள தவறணைகள் அனைத்தும் சமூகசீர்கேட்டை ஏற்படுத்தாத முறையில் மறைவிடம் அமைத்து சுத்தத்தையும் ஒழுங்கையும் பேணவேண்டும். அத்துடன் தவறணைகளில் அளவு கலப்படம் போன்ற விடையங்களில் சங்க நிர்வாகம் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## நினைவு தூபி திறப்பு

(யாழ்ப்பாணம்)

பெண் போராளிகளான சுகி (நீர்வேலி), இமல் குருநகர் ஆகியோரது இரண்டாவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, இன்று நீர்வேலியிலும் குருநகரிலும் நினைவுத் தூபித்திறப்பும் நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெறும். இதனை தொடர்ந்து கலாச்சாத்ரப் பிரிவினரின் ''நடந்து வந்த பாதை'' என்னும் வில்லிசையும் ''விடியலைத்தேடும் வோம்'' என்ற நாடகமும் இடம் பெறும்.

இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள்மக்கள் முன்னணி மகளிர் பிரினர் கேட்டுக் கொள்கின்றன.

அடிப்படையில் ஒரிசாவில் தெரிவிக்கையில், இதுவரை 1600 பேர் திருகோணமலையிலிருந்து கடல் மார்க்கமாகவும் விமானமூலமாகவும் இந்தியா வந்துள்ளார்கள் என்றும் அவர்கள் ஒரியாவில் கொறாக்பூரில் தங்கியுள்ளார்கள் என்றும், சம்பந்தப்பட்ட அரசாங்கத்துடன் கலந்து ஆலோசித்த பிறகு அவர்கள் ஒரிஸாவில் ஏனைய இடங்களில் குடியேற்றப்படுவார்கள் என்றார்.

ஸ்ரீலங்கா அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்தியாவில் தங்கியிருக்கும் போராளிக்குழுக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் சூழ்நிலையை ஏற்படுத்தியதும், அவர்களை இந்தியா ஸ்ரீலங்காவுக்கு திருப்பி அனுப்பும் என்றும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

## மேலும் 50 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

தேசவிரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களில் மேலும் ஐம்பது பேர் விடுதலைப் புலிகளினால் நாளை விடுதலை செய்யப் படவுள்ளார்கள் இதில் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டவர்களும் சரணடைந்தவர்களும் அடங்குகின்னாசள். இவர்கள் அச்சுவேலி விடுதலைப் புலிளின் பிரதேசக் காரியாலத்தில் வைத்து விடுவிக்கப் படவுள்ளனர்.

# தொழிற்சங்கங்கள் போர் கோலம் பூணவேண்டும்

- டொமினிக்

(யாழ்ப்பாணம்)

எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக தொழிற்சங்கங்கள் போர் கோலம் பூணவேண்டும், சம்ளம் உயரவை மட்டும் மையமாக கொண்டு நாம் போராட்டங்களை நடத்துவோமானால் அது ஓர் குறுகிய வட்டத்துக்குள் மட்டுமே எமது நலன்களை பாதுகாப்பதாக அமையும், அடிப்படையான ஒரு சுயநலன் மிக்க போராட்டம் எமக்கு பயன்பட போவதில்லை. ஒரு சமூகத்தின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும்போது அதனை முதன்முதல் மக்களுக்கு சுட்டிக்காட்டி அதற்கெதிராக போர்க்கொடி உயர்த்த வேண்டிய பொறுப்பு இந்த நாட்டுக்குத் தொழிற் சங்கங்களையே சாரும்.

இவ்வாறு நேற்று மனோகரா தியேட்டரில் நடைபெற்ற தெங்கு பனம்பொருள் உற்பத்தியாளர்கள் மத்தியில் பேசு

(6ஆம் பக்கம் பார்க்க)

# பெருமாள் மர்ம மறைவு; இந்தியாவில் இல்லை; இங்கும் இல்லை!



(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் திருகோணமலையை விட்டு வெளியேறிவிட்டார் என்று செய்திகள் தெரிவிக்கின்றபோதிலும் அவர் எங்கே போய்ச் சேர்ந்திருக்கிறாரென்ற தகவல் இன்னமும் வெளியாகவில்லை. பெருமாள் இந்தியா போனதாகக் தங்களுக்குத் தகவல் இல்லை என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்தது. டில்லியிலுள்ள வெளிவிவகார அதிகாரியும் இப்படி மறுப்புத் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை தமது மனைவி அங்கயற்கண்ணி வரதராஜப்பெருமாளை சீனன்குடா விமான நிலையத்தில் வழி அனுப்பி வைத்த திரு. பெருமாள் திருகோணமலையில் தொடர்ந்து தங்கியிருந்தார்.

வரதராஜப்பெருமாளுக்குப் பாதுகாப்டளிப்பது தங்கள் கடமை என்று இந்திய இராணுவ அதிகாரியும கூறியிருந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈ. பி. ஆர். எல். எவ். செயலாளர் கந்தையா பத்மநாபாவும் மற்றும் சகாக்களும் திருகோணமலையிலிருந்து இந்திய விமானப்படை விமானத்தில் ஒரிஸா தலைநகர் புவனேஸ்வர் போய்ச் சேர்ந்தனர்.

திரு வரதராஜப்பெருமாள் வெளியேறிச் சென்றிருந்தாலும் அவர் நிரந்திரமாக வெளிநாட்டில் தங்கியிருக்கமாட்டார் என்றும் விரைவில் நாட்டுக்குத் திரும்பி வருவாரென்றும் ஈ. பி. ஆர். எல். எவ். அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக பி. பி. ஸி நேற்றிரவி தெரிவித்தது.

அதேவேளை வரதராஜப் பெருமாள் இராணுவப்பயிற்சி பெறுவதற்காக தமது சில சகாக்களுடன் லெபனான் சென்றிருக்கலாம் என தமிழ் நாட்டில் இருந்துவரும் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### முதலமைச்சர் அல்ல

வடக்கு - கிழக்கு மாகாண சபை செயலிழந்ததைத் தொடர்ந்துசெயலாளர்களும், உயர் நிர்வாக அதிகாரிகளும் தமது சொந்த ஊர்களுக்குச் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது. இதேவேளை பிரதம செயலாளர் வி.எஸ்.சிவராஜா கொழும்பு வந்து சேர்ந்துள்ளாராம்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் நளின் செனிவிரத்தினா, நாளை மாகாணசபை நிர்வாகத்தை மறுசீரமைக்க, திருகோணமலை செல்லவிருக்கிறார். ஆளுநர் திருகோணமலை போகுமுன் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்களைச்

(6ஆம் பக்கம் பார்க்க)

# “பின்கதவுப் பேச்சும் அரசியல் சத்தியுமே எனது இடமாற்றம்”

— யாழ். இந்து அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் நாளை மறுதினம் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டிருப்பதை உடனடியாக ரத்துசெய்யக் கோரி யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர்களினால் கையெழுத்திட்டு கல்வி அமைச்சுக்கு மகஜர் ஒன்று நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளமேற்படி மகஜரில் யாழ். இந்துக்கல்லூரியின் மாணவராக, ஆசிரியராக, உதவி அதிபராகவிருந்து கடந்த நான்கு ஆண்டுகளாக திரு.பொன்னம்பலம் மேற்படி கல்லூரியின்அதிபராக கடமையாற்றி வருகிறார். அவர்மீது குற்றம் எதுவும் கண்டிராத நிலையில் ஏலவே ஒழுங்காற்று நடவடிக்கை இல்லாமல் திடீரென்று இடமாற்றம் செய்வது அர்த்தமற்றது என்றும், கல்லூரியின் நூற்றாண்டுவிழாக் காலத்தில் கல்லூரியை நன்கு அறிந்த அதிபரை இடமாற்றம் செய்வதற்கு இது அல்ல நேரம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி அதிபர் கல்லூரியைப் பொறுப்பேற்ற நாள் முதல் யாழ். இந்துக்கல்லூரி பகிரங்கப் பரீட்சையிலும், பாடசாலையின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளதாகவும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் மாற்றம் சம்பந்தமாக நேற்று குறிப்பிட்ட அதிபரைச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

பவுசர் ராங்கி 2,600 லீட்டர் இங்கிலிஷ்தயாரிப்பு கறள் பிடியாது மூடி, பம்ப் உடன் ORIGINAL CONDITION. மலிவு விற்பனை பிணிதீர் மனை சந்தைச்சதுக்கம் சங்கானை (B-126)

அப்பளம் தயாரிப்பாளர்களுக்கு ஏற்ற வகையில் தயாரிசப்பட்ட ' உழுந்து மா, கிலோ 22/- படி பெற்றுக் கொள்ளலாம். M.G.M., No·777 K.K.S Rd, Jaffna·

ரைப்பிங்

தமிழ் ரைப்பிங், ஆங்கில இலக்ட்ரோனிக் ரைப்பிங் வேலைகளை சிரமமின்றி தெளிவாகவும் விரைவாகவும் செய்து முடிக்க சிறந்த ஸ்தாபனம் 'கிளீன் கட்'

## தபால் ரயிலால் தனியார் பஸ் சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் தொடங்கப்பட்ட யாழ்ப்பாணம் கொழும்பு இரவு ரயில் சேவையைத் தொடர்ந்து, இவ்வளவு காலமும் தமது பஸ்களில் பயணம் செய்த பயணிகளில் தொண்ணூறு வீதமானவர்கள் குறைந்துள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்,

இதைத் தொடர்ந்துதமது கொழும்பு யாழ்ப்பாணம் கட்டணத்தை நூற்றி ஐம்பது ரூபாவிலிருந்து நூற்றி இருபத்தைந்து ரூபாவாக குறைக்கப் பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தார். (லோ)

## நெடுந்தீவு மக்கள் பிரச்சினை விடுதலைப்புலிகளிடம் புகார்

(புங்குடுதீவு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் நெடுந்தீவில் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தினர். இக்கலந்துரையாடலில் விடுதலை புலிகள் இயக்கத்தின் தீவுப் பகுதிப் பொறுப்பாளர் திரு. ஜேம்ஸ், தீவக அரசியல் பொறுப்பாளர் திரு. கஸ்ரோ, தீவக அரசியற் பிரிவைச் சேர்ந்த திரு. நரேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட நெடுந்தீவு பிரமுகர்களால் பின்வரும் கோரிக்கைகள் முன் வைக்கப் பட்டுள்ளன.

இந்திய மீன்பிடி 'ட்றோலர்கள்' அப்பிராந்தியங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதால் நெடுந்தீவு வாழ் மீனவர்களின் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. இதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நெடுந்தீவில் நிலவும் குடி தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப் படவேண்டும்.

சகல மக்களின் குறைகளை 'விடுதலை புலிகள்' தான் தீர்த்து வைக்க வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட குறிகாட்டுவான் நெடுந்தீவுப் படகு சேவை விரிவாக்கப்பட வேண்டும்.

படகு சேவையை மேற்கொள்ளும் பாதையில் வளர்ந்திருக்கும் கற்கள் அப்புறப் படுத்தப்பட வேண்டும் என்பனவே. (22)

## தீவுப்பகுதி மாணவர்களுக்கு உடற்பயிற்சி முகாம் அமையும்

''இன்றைய மாணவர்கள் தனியே புத்தகக் கல்வியுடன் நின்றுவிடாமல் விளையாட்டு, உடற்பயிற்சி, நடனம், நாடகம் ஆகியவற்றிலும் கூடிய நாட்டம் காட்டவேண்டும். ஏனெனில் அவர்கள் 21 ஆம் நூற்றாண்டில் வாழப்போகிறவர்கள், புத்தகக் கல்வியினால் நாட்டுக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. எனவே மாணவர்கள் ஏனைய துறைகளிலும் ஈடுபட்டால் தான் முழுமையான பலனைப் பெறமுடியும்.''

இவ்வாறு புங்குடுதீவுக் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான 'இல்ல மெய்வல்லுநர் போட்டியில்' பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வேலணை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தீவகக் கொத்தணிப் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி, எதிர்வரும் சித்திரை மாதமளவில் உடற்பயிற்சி முகாம் ஒன்று நிறுவப்பட்டு, அதில் மாணவர்களுக்கு உடற்பயிற்சி அளிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்குத் திருமதி சி. புலேந்திரன பரிசில்களை வழங்கினார்.

இப்போட்டியில் நீல இல்லம் வெற்றிக் கேடயத்தைத் தட்டிக் கொண்டது. சிவப்பு இல்லம் 2 ஆம் இடத்தையும், பச்சை இல்லம் 3 ஆம் இடத்தையும், மஞ்சள் இல்லம் 4 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

அண்மையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் 'உடற் பயிற்சிக் கண்காட்சியும்' சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது. (22)

கிரிக்கெற்

## யாழ்ப்பாணக்கல்லூரிபுதியசாதனை

### சென்பற்றிக்ஸ்சுடன் நடந்த போட்டியில் எவருக்கும் வெற்றியில்லை

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக்சல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 73வது கிரிக்கெற் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 210 ஓட்டங்களைப்பெற்றது ஏ.ஜ ஆர் இன்பசோதி மிகவும் சிறப்பாக விளையாடி 37 ஓட்டங்களைப் பெற்றார். வீரசுதனும், ஜனர்த்தனும்தலா நாலு விக்கற்றுக் களைக் கைப்பற்றினார்கள்.

யாழ்ப்பாணக்கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 221 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். அணித்தலைவர் வினோதன் மிகவும் சிறப்பாக விளையாடி மின்னல் வேகத்தில் 51 ஓட்டங்களைப் பெற்றார். பாஸ்கரன் 41 ஓட்டங்களைப் பெற்றார். எ.ஜ. ஆர். இன்பசோதி 4 விக்கற்றுகளையும், வில்டன் 3 விக்கற்றுக்களையு ஏவீழ்த்தினார்கள்

இப்போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரியின்அணித்தலைவரும் பாரத்தும் 7வது விக்கற் சோடிகளாகச் சேர்ந்து மிகவும் சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடி 1983 ஆம் ஆண்டு ஏற்படுத்திய சாதனையை இவ்விருவரும் முறியடித்து புதிய சாதனையை ஏற்படுத்தினர்.

இப்போட்டியில் சகல துறைகளிலும் சிறந்த விளையாட்டு வீரருக்கான பரிசையும் சிறந்த பந்து வீச்சாளருக்கான இரு பரிசுகளையும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் வாலிப வீரர் ஏ.ஜ.ஆர். இன்பசோதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் சிறந்த ஆட்டக்காரருக்கான பரிசையும் சிறந்த துடுப்பாட்டருக்கானபரிசையும் யாழ்ப்பாணக் கல்லூரியின் அணித்தலைவர் வினோதன் பெற்றுள்ளார்.

சிறந்த பந்து தடுப்பு வீரருக்கான பரிசை யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் பாஸ்கரன் பெற்றார். (42)

## தொழில் நுட்பக்கல்லூரி பரீட்சை மே இறுதியில்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரி ஆண்டு இறுதிப் பரீட்சை மே மாதம் 28-ம் திகதி ஆரம்பமாகும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளன.

இதனையடுத்து இறுதிப் பரீட்சைக்குத் தயார் செய்து கொள்ளுமாறு சகல பயிற்சி நெறி மாணவர்களுக்கும் தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் திரு. சி. இராஜேந்திரா தெரிவித்துள்ளார்.

## இன்னலுற்ற விவசாயிகளுக்கு இலங்கை வங்கியே உதவியது

(தெல்லிப்பளை)

கடந்த பல ஆண்டுகளாக யாழ். மாவட்டத்தில் நிலவிய சூழ்நிலைகளினால் இன்னலுற்ற வறிய சிறு விவசாயிகளுக்கு அவர்களின் உற்பத்தி முயற்சிகளுக்கு மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் நம்பிக்கையுடன் கடன் வழங்கி கை கொடுத்துதவியது இலங்கை வங்கி ஒன்றே அதிலும் இவ் உற்பத்திக் கடனை வழங்குவதிலும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதிலும் முன்னணியிலும், முன்மாதிரியாகவும் திகழ்வது சுன்னாகம் கிளையாகும். அதன் முகாமையாளர் என்ற வகையில் நான் பெருமையடைகின்றேன்.

இவ்வாறு இலங்கை வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளர் எம். பாலசிங்கம் இடைக்காடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் அப்பகுதி சனசமூக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விவசாயக் கடன் வழங்கல் பற்றிய சருத்தரங்கில் ஆரம்பவுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தனதுரையில் இக் கடன் வசதியை முன்னர் பெற்ற உற்பத்திக் கடன்களை ஒழுங்காக மீளச் செலுத்தியவர்களே பெற்று வருகின்றனர். சுன்னாகக் கிளை மூலம் கடந்த காலங்களில் புத்தூர் கமநல சேவைப் பகுதியில் வழங்கப்பட்ட கடன்களில் 43 இலட்ச ரூபாய்களை 1700 விவசாயிகள் மீளச் செலுத்த வேண்டியுள்ளது.

இந்த துரதிஸ்ட நிலைமையினால் புதிய விவசாயக் கடன்கள் வழங்கு

90,000 ரூபாவினை கடனாகப் பெற்றுள்ளார். எனவே இதனை ஒரு தருணமாகப் பயன்படுத்தி தங்களை வளம் படுத்த முயல வேண்டும் என்றார்.

சுன்னாகம் இலங்கை வங்கி கிளை உதவி முகாமையாளர் எஸ். குமாரலிங்கம், பேசுகையில் விவசாயிகள் வெறுமனே உற்பத்தியில் மட்டும் கவனம் செலுத்தாது விவசாயம் சார்ந்த கைத்தொழில் முயற்சிகளிலும் ஆர்வம் செலுத்த முற்பட வேண்டும். எடுத்தவுடனேயே பெரு முதலுடன் ஆரம்பிக்காது உங்கள பகுதியில் உள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி மிகக் குறைந்த முதலீட்டுடன் இலகு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி குடிசைக் கைத்தொழிலாக ஆரம்பித்து படிப்படியாக அபிவிருத்தி செய்யவேண்டும். உற்பத்தியில் மேலதிக உர, கிருமிநாசினி பாவனைகளைத் தவிர்க்க வேண்டும் என்றார்.

வங்கி விவசாய அபிவிருத்தி

## தண்டனை

(வடமராட்சிகிழக்கு)

மது அருந்தி விட்டு வீதியில் சண்டை செய்தவர்கள் புல் செருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

பளை பஸ் நிலையத்திற்கு அண்மையில் மதுபோதையில் சள்டை பிடித்தவர்களே புல் செருக்க வேண்டிய தண்டனை நிலைக்கு உள்ளானர்கள். (63)

## யாழ்ப்பாண ரயில் நிலையம் புதுப் பொலிவுடன் காட்சி

தமிழ்நாட்டில்

## சிந்து நாகரீகத்திற்கு முந்திய தொல் சான்றுகள் கண்டுபிடிப்பு

(திருச்சி)

இவை மொகஞ்சதாரோ,

80 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா
பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு
தொடர்கதை

## வேலணையில் கொள்ளை

(தீவுப்பகுதி)

நேற்று முன் தினம் இரவு எட்டரை மணியளவில் வேலணை வடக்கிலும், கிழக்குப் பகுதியிலும் களவுகளும் கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இதே போல் சில தினங்களுக்கு முன்னர் மண்கும்பான்

வர்கள், புத்தகக் கல்வியினால் நாட்டுக்கு எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. எனவே மாணவர்கள் ஏனைய துறைகளிலும் ஈடுபட்டால் தான் முழுமையான பலனைப் பெறமுடியும்.''

இவ்வாறு புங்குடுதீவுக் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான 'இல்ல மெய்வல்லுநர் போட்டியில்' பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வேலணை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தீவகக் கொத்தணிப் ...

... போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்குத் திருமதி சி. புலேந்திரன பரிசில்களை வழங்கினார்.

இப்போட்டியில் நீல இல்லம் வெற்றிக் கேடயத்தைத் தட்டிக் கொண்டது. சிவப்பு இல்லம் 2 ஆம் இடத்தையும், பச்சை இல்லம் 3 ஆம் இடத்தையும், மஞ்சள் இல்லம் 4 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

அண்மையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளின் 'உடற் பயிற்சிக் கண்காட்சியும்' சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது. (22)

... திருக்கும் கற்கள் அப்புறப் படுத்தப்பட வேண்டும் என்பனவே. (22)

## தண்டனை

(வடமராட்சிகிழக்கு)

மது அருந்தி விட்டு வீதியில் சண்டை செய்தவர்கள் புல் செருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

பளை பஸ் நிலையத்திற்கு அண்மையில் மதுபோதையில் சண்டை பிடித்தவர்களே புல் செருக்க வேண்டிய தண்டனை நிலைக்கு உள்ளானர்கள். (63)

... ஓற்ற வறிய சிறு விவசாயிகளுக்கு அவர்களின் உற்பத்தி முயற்சிகளுக்கு மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் நம்பிக்கையுடன் கடன் வழங்கி கை கொடுத்துதவியது இலங்கை வங்கி ஒன்றே அதிலும் இவ் உற்பத்திக் கடனை வழங்குவதிலும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதிலும் முன்னணியிலும், முன்மாதிரியாகவும் திகழ்வது சுன்னாகம் கிளையாகும். அதன் முகாமையாளர் என்ற வகையில் நான் பெருமையடைகின்றேன்.

கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் அப்பகுதி சனசமூக நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விவசாயக் கடன் வழங்கல் பற்றிய சருத்தரங்கில் ஆரம்பவுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தனதுரையில் இக் கடன் வசதியை முன்னர் பெற்ற உற்பத்திக் கடன்களை ஒழுங்காக மீளச் செலுத்தியவர்களே பெற்று வருகின்றனர். சுன்னாகக் கிளை மூலம் கடந்த காலங்களில் புத்தூர் கமநல சேவைப் பகுதியில் வழங்கப்பட்ட கடன்களில் 43 இலட்ச ரூபாய்களை 1700 விவசாயிகள் மீளச் செலுத்த வேண்டியுள்ளது.

இந்த துரதிஸ்ட நிலைமையினால் புதிய விவசாயக் கடன்கள் வழங்குவதை ஊக்குவிக்க முடியாமலும் பல தடைகள், கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டியும் உள்ளது. கடந்த பெரும்போகத்தில் எமது கிளை 50 விவசாயிகளுக்கு 13 இலட்சம் ரூபாவினைக் கடனாக வழங்கியது. இக் கடன் வசதியை ஆரம்ப காலம் முதல்பெற்று ஒழுங்காக மீளச் செலுத்திய சிறு விவசாயி இந்தப் போகத்தில் ...

... படுத்த முயல வேண்டும் என்றார்.

சுன்னாகம் இலங்கை வங்கி கிளை உதவி முகாமையாளர் எஸ். குமாரலிங்கம், பேசுகையில் விவசாயிகள் வெறுமனே உற்பத்தியில் மட்டும் கவனம் செலுத்தாது விவசாயம் சார்ந்த கைத்தொழில் முயற்சிகளிலும் ஆர்வம் செலுத்த முற்பட வேண்டும். எடுத்தவுடனேயே பெரு முதலுடன் ஆரம்பிக்காது உங்கள பகுதியில் உள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி மிகக் குறைந்த முதலீட்டுடன் இலகு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி குடிசைக் கைத்தொழிலாக ஆரம்பித்து படிப்படியாக அபிவிருத்தி செய்யவேண்டும். உற்பத்தியில் மேலதிக உர, கிருமிநாசினி பாவனைகளைத் தவிர்க்க வேண்டும் என்றார்.

வங்கி விவசாய அபிவிருத்தி உதவியாளர் பொ. பாலகுமார் பேசுகையில் விவசாயிகள் பணப் பயிர்களான மிளகாய், வெண்காயம், உருளைக்கிழங்கு போன்றனவற்றில் மட்டும் கவனம் செலுத்தாமல் மாவட்டத்தின சுயதேவையினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி முறைகளிலும் ஆர்வம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தினார். (26)


(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)

10-30, 2. 30, 6. 30

கமலஹாசன் -- சுஜாதா

அவள் ஒரு தொடர்கதை


## வேலணையில் கொள்ளை

(தீவுப்பகுதி)

நேற்று முன் தினம் இரவு எட்டரை மணியளவில் வேலணை வடக்கிலும், கிழக்குப் பகுதியிலும் களவுகளும் கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இதே போல் சில தினங்களுக்கு முன்னர் மண்கும்பான் பகுதியிலுள்ள மூன்று வீடுகளில் கொள்ளைச் சபபவங்களும் இடம் பெற்றுள்ளது. வேலணை வடக்கில் திரு.குலவீரசிங்கம், திரு.க.தேவராசா ஆகியோர்களின் வீட்டில் துப்பாககிகளுடன் உட்புகுந்த கொள்ளையர் கோஷ்டி வீட்டாரை மிரட்டி விட்டு ரொக்கப்பணம், தங்கநகைகள், கமரா, கூறைச்சேலைகள், மற்றும் பெறுமதி வாய்ந்த பொருட்களைக் கொள்ளையடித்தும்சென்றுள்ளனர். இவைகளின் பெறுமதி இலடசக்கணக்கில் இருக்கலாமென அறிய வருகிறது. பயங்கர ஆயுதங்கள், துப்பாக்கிகள் இவற்றைக்கொண்டே வீட்டு உரிமையாளர்களை மிரட்டி இக் கொள்ளைச் சம்பவங்களை நடாத்தியுள்ளனர்' எனவும் தெரியவருகிறது. இதனால் இப்பகுதியில் மக்கள் பதட்டமடைந்துள்ளனர். இக்களவு' கொள்ளைச் சம்பந்தமான முறைப்பாடுகளை கொள்ளை போன வீட்டுச்சொந்தக்காரர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் முறையிட்டுள்ளனர். (15)

# யாழ்ப்பாண ரயில் நிலையம் புதுப் பொலிவுடன் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். புகையிரத நிலையம் மீண்டும் புதுப் பொலிவுடன் காட்சியளிக்கிறது. இரவு நேரம் போதிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தியப் பொலிஸார் இதனைச் சிலகாலம் தமது முகாமாகப் பாவித்து வந்ததால் இது அசுத்தமாகவும் அழுக்காகவும் காட்சியளித்தது.

தற்போது இங்குரயில் சேவைகள்நடைபெறுவதால் இந்த ரயில்நிலையத்தை சீராகவைத்திருக்க ரயில்வே பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழ்நாட்டில்

# சிந்து நாகரீகத்திற்கு முந்திய தொல் சான்றுகள் கண்டுபிடிப்பு

(திருச்சி)

சிதம்பரனார் மாவட்டம் சாயர்புரம் அருகே செந்தேரி எனும் இடத்தில் சிந்து சமவெளி நாகரீகத்திற்கு முந்தைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட முதுமக்கள் தாழி ஒன்றையும், கல்மற்றும் இரும்பிலான ஆயுதங்களையும் தூத்துக்குடி வ. உ. சிதம்பரனார் கல்லூரி மாணவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இவை மொகஞ்சதாரோ, கரப்பா நாகரீகத்திற்கு முந்திய காலத்தைச் சேர்ந்தவை என்றும், இலங்கையில் ஏற்கனவே இதற்கு இணையான காலத்திற்குரிய சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன என்றும் வ. உ. சிதம்பரனார் கல்லூரி பேராசிரியர் ஜி. மணிமாறன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அன்னாசிப்பழ வியாபாரிகள் பஸ் நிலையத்தில் தொல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் கடந்த சில நாட்களாக அன்னாசிப்பழ வியாபாரிகளின் தொல்லையால் போக்குவரத்து செய்யும் வாகனங்களுக்கு பெரும் இடைஞ்சலாகவுள்ளது.

குறிப்பாக யாழ். பஸ் நிலையத்தின் வாசலில் அன்னாசிப் பழங்களைக் குவித்து வைத்து விற்பதால் பஸ் சாரதிகள் பஸ்களை பஸ் நிலையத்தினுள் கொண்டு செல்லவோ திருப்பி எடுக்கவோ முடியாதுள்ளதாக பஸ் நிலைய அதிகாரி ஒருவர் ஈழநாதத்துக்கு தெரிவித்தார்.

அத்துடன் பொதுமக்களும் பஸ் நிலையத்தினுள் வந்து போகவும் இவர்கள் இடைஞ்சலாக உள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அன்னாசிப்பழ வியாபாரிகளை வேறு இடங்களுக்கு போகுமாறு அதிகாரிகள் கேட்டபோதும் அவர்கள் மறுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மீண்டும் பழைய இடத்தில் பனை அபிவிருத்திச்சபை

(கொழும்புத்துறை)

1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப்படையினரின் தாக்குதலையடுத்து இடம் பெயர்ந்த யாழ். வீடமைப்புச் செயலகத்திலிருந்த இலங்கைப் பனை அபிலிருத்திச் சபைத் தலைமைக் காரியாலயம் மீண்டும் யாழ். வீடமைப்புச் செயலகத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த இரண்டரை வருடங்களாக இவ் அலுவலகம் யாழ் வேம்படி வீதியில் தற்காலிகமாகச் செயற்பட்டு வந்தது. இதுவரை காலமும் இந்திய அமைதிப்படையினர் யாழ். வீடமைப்புச் செயலகத்தில் முகாமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இந்தியப் படையினர் வெளியேறியதை அடுத்துப் பனை அபிவிருத்திச் சபைத் தலைமைக் காரியாலயம் மீண்டும் யாழ் வீடமைப்புச் செயலகத்திற்குச் சென்றுள்ளது. (24)

# மீண்டும் யாழ். செயலகத்தில் இலங்கை வங்கிக் கிளை

(கொழும்புத்துறை)

1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றவன் செயல்கள் இராணுவ அத்துமீறல் நடவடிக்கைகளினால் செயலற்றிருந்த யாழ். செயலக இலங்கை வங்கிக்' கிளை மீண்டும் செயப்படவுள்ளது.

யாழ். செயலக இல 'நுகை வங்கிக்' கிளை ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் மீண்டும் இயங்கத் தொடங்கும் என்று செயலக உயரதிகாரி எமது நிருபருக்குத் தெரிவித்துள்ளார்.

சென்ற மூன்று வருடங்களாகத்தத் தமது மாதாந்தச் சம்பளத்தை உடன் பணமாக மாற்ற முடியாமல் கஷ்டப்பட்ட செயலக ஊழியர்களும், ஒய்வூதியம் பெறுபவர்களும், மாதாந்தப் பொதுசன உதவிப் பணம் பெறுபவர்களும், செயலக இலங்கை வங்கிக் கிளை திறக்கப்படுவதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (24)


நியூ ராஜா கிறீம் ஹவுஸ்

தரமான, சுவையான, ஐஸ்கிறீம் வகைகள் தேவையான போது நாட வேண்டிய இடம்

நியூ ராஜா கிறீம் ஹவுஸ்

- ஐஸ்கிறீம் வகைகள்
- ஐஸ் பழம்
- ராஜா பீடா
- குளிர்பானங்கள்
- ஐஸ் சொக்ஸ்
- ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
- சிற்றுண்டி வகைகள்
- யோகட் கப்ஐஸ்கிறீம்

இல 64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

B/239

# சோவியத்தில் இருந்து விடுதலை பெற்றதாக லித்வேனியா அறிவிப்பு

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் லித்வேனியக் குடியரசின் புதிய பாராளுமன்றம் சோவியத் யூனியனில் இருந்து தான் அரசியல் விடுதலை பெறுவதாக அறிவித்திருக்கிறது. இது குறித்த வாக்கெடுப்பில் 124 வாக்குகள் ஆதரவாக இருந்தது. இதில் எதிர்த்து எந்த வாக்குகளும் இடப்படவில்லை. ஆறு பிரதிநிதிகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. லொன் பாங்கிசை முதலாவது கம்யூனிஸ்ட் கட்சி அல்லாத ஜனாதிபதியாக பாராளுமன்றம் தேர்ந்தெடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. சுதந்திரத்திற்கு முந்திய முன்னணியான சடோல் தலைவராக அவர் இருக்கிறார் அவர் குடியரசு கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அல்கிடாவை தோற்கடித்திருக்கிறார்.




## சிலியில் 17 ஆண்டுகளின் பின் ஜனநாயக ஆட்சி

(சான்டிகாகோ)

சிலியில் பற்றீசியா அல்பின் புதிய ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். சிலியில் 1973 இன் பின்னர் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது ஜனாதிபதி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் நீண்ட காலம் இராணுவ தளபதியாக இருந்த ஜெனரல் அகஸ்ரோ பெனர்ஜிக்கு அடுத்து இவர் பதவியேற்றார். இவர் மரபு வழிப்படி ஜனாதிபதி பதவியை பசுபிக் துறைமுக நகரான கால்பராயில் ஞாயிற்றுக்கிழமை ஏற்றுக் கொண்டார்.

இதற்கிடையில் ஜனாதிபதி பதவியை ஒப்படைக்கு முன்பாக வானொலியில் உரையாற்றிய ஜெனரல் பெனர்ஜி தமக்கு அடுத்து ஜனாதிபதியாக பதவி ஏற்ற அல்பினுடன் ஒன்று சேர்ந்து மக்களை பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டார். எனினும் இவர் ராணுவ பதவியில் இருந்து விலக மறுத்துள்ளார்.

## பாலஸ்தீன பிரச்சினைக்கு சர்வதேச மகாநாடு

### பாதுகாப்புச் சபையிடம் கோரிக்கை

(கோலாலம்பூர்)

பாலஸ்தீனிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மேற்கு ஆசியாபற்றிய சர்வதேச மகாநாடு ஒன்றை கூட்டுவதற்கு உதவுமாறு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிடம், மண்டல சார்பற்ற இயக்கத்தின் வெளியுறவு அமைச்சர்கள் செயற்குழு கேட்டுக்கொண்டிருக்கிறது. இது தொடர்பான பணியை உடன் தொடங்குமாறு கியூனிசம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் பலஸ்தீனிய பிரச்சனை குறித்த செயற்குழு வற்புறுத்தி இருக்கிறது.

இந்தியா, அல்ஜீரியா, செனகல், பலஸ்தீன், சிம்பாம்பே, சாம்பியா ஆகிய நாடுகள் இச் செயற்குழுவில் இருக்கின்றன.

மேலும் இக் கூட்டத்தில் கலந்துகொண்ட பலஸ்தீனிய தலைவர் யசீர் அரபாத் தங்களது பிராந்தியங்களை இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பதால் அறுபது சதவீத பலஸ்தீனிய மக்கள் தாயகத்திற்கு வெளியே வசிப்பதாக கூறினர். இக் கூட்டத்தில் கலந்துகொன்ட இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ கே. குஜரால் அரபுப் பகுதிகளில் யூதர்களை குடியமர்த்துவது அரபுப் பகுதியில் இஸ்ரேல் ஏற்கனவே ஆக்கிரமித்துள்ள சட்டவிரோத நடவடிக்கையுடன் சேர்ந்தது எனற யசீர் அரபாத்தின் கருத்தை ஏற்றுக்கொண்டார்.

## கிராமிய ஆஸ்பத்திரி வைத்தியர் சேவைக்கு மக்கள் பாரட்டு

(தீவுப்பகுதி)

முற்றிலும் அரசாங்கத்தை நம்பியிராது பொது ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டு மருந்துகளைப் பெற்று நோயாளர்களின் பிணிகளைத் தீர்த்து வருகின்றார் வேலணை கிராமிய மருத்துவ மனையைச் சேர்ந்த டாக்டர் ஆ. திருநாவுக்கரசு

இந்த ரீதியில் இவர் வேலணைப் பகுதி குழந்தைகளுக்கு ஏற்பட்டு வரும் மாலைக்கண் நோயை தீர்த்து வைக்கும் பொருட்டு யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் தொடர்பு கொண்டு அதற்கேற்ற மருந்துகளைப் பெற்று வழங்கி வருகின்றார்.

மேலும் யாழ். செஞ்சிலுவைச்சங்க தலைவர் டாக்டர் தெய்வேந்திரனுடன் தொடர்பு கொண்டு குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தினூடாக மாலைக்கண் நோயை நீக்கும் மருந்துகளைப் பெறுவதற்கு முயற்சிகள் செய்து வருகின்றார். இவரது சேவைக்கு வேலணை மக்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். (15)

## கொலம்பியாவில் கெரில்லாக்கள் ஆயுதம் ஒப்படைப்பு

(மொசாட்டோ)

கொலம்பியாவில் எம். 19 என்ற கெரில்லாக்கள், அரசாங்கத்துடன் சமாதான உடன்படிக்கை செய்துள்ளார்கள் எனத் தெரியவருகிறது. எம். 19 கெரில்லாக்கள் எதிர் வரும் சனியன்று ஒன்றுகூடி, ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பங்குபற்றுவதெனத் தீர்மானிக்க உள்ளனர்.

கொலம்பியாவில் இயங்கி வரும் நான்கு முக்கிய கெரில்லா இயங்கங்களில் ஒன்றான எம். 19 கெரில்லாக்கள் சென்ற வெள்ளியன்று, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வைபவத்தில், தாம் நிராயுதபாணிகளாகித் தம்மை உத்தியோகபூர்வமான அரசியல் கட்சியாக மாற்றிக் கொள்ள சங்கற்பம் எடுத்துள்ளார்கள். இக் கெரில்லா அமைப்பு 800 பேரை அங்கத்தினராகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

1985 இல் இக்கெரில்லாக்கள் பொகாட்டாவில் நீதி மாளிகையைத் தாக்கித் தம் வசமாக்கிக் கொண்டனர். இத்தாக்குதல் சம்பவத்தின் போது 100 பேர் உயிரிழந்ததாகத் சொல்லப்படுகிறது. மார்க்சிஸ்ட் கட்சி சாராத எம். 19 கெரில்லா அமைப்பு 1970 இல் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கெரில்லாக்கள் சர்வதேச சோசலிஷ்ட் குழுவினரிடம் வியாழனன்று தமது ஆயுதங்களைக் கையளித்தனர்.

கெரில்லாக்களின் தலைவர் 6 இலட்சம் சனத் தொகையைக் கொண்ட பொகாட்டா நகரில் மேயர் தேர்தலுக்கு வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார். தேர்தல் எதிர் வரும் ஞாயிறன்று நடைபெறும்.

வெள்ளியன்று நடந்த வைபவத்தில் கொலம்பியா ஜனாதிபதி பார்க்கோ, மற்ற அமைப்புகளும் ஆயுதங்களைக் கைவிடும்படி வேண்டுகோள் விடுத்தார்.

## நேர அட்டவணை தெரியாமல் பஸ் நிலையத்தில் மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நேர அட்டவணைகள் தெரியாமல் பயணிகள் ரைம் கீப்பர்களை தேடி அலைகின்றனர். ஏனைய பஸ் நிலையங்களைப்போல நேர அட்டவணை இங்கு இல்லாததே இதற்கு காரணம்.

தூர இடங்களிலிருந்து வரும் பயணிகள் தமது இடங்களுக்கு திரும்பப் போவதற்கு எந்த இடத்தில் எந்த பஸ் நிற்கிறது எனத் தேடுகிறார்கள்.

ஒரு பஸ் புறப்படுவது குறித்து மத்திய பஸ்நிலைய அதிகாரிகளிடம் விசாரித்தால் ரைம் கீப்பரிடம் கேட்கும்படி பொதுமக்களுக்கு கூறுகின்றனர்.

## மட்டக்களப்பு கிராமங்களில் நெடுமாறன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த ஒரு வார காலமாக தங்கியிருக்கும் தமிழக அரசியல் தலைவர் திரு. பி. நெடுமாறன் ஒருவார காலத்திற்குள் 25க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு

## மக்கள் முன்னணி தலைவர்களுக்கு கிளிநொச்சியில் வரவேற்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது கவின்கலைக் கல்லூரியைத் திறந்து வைப்பதற்காக கிளிநொச்சிக்கு வருகை தந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மாத்தயாவுக்கு கிளிநொச்சி மக்கள் மகத்தான வரவேற்பளித்தனர்.

மக்கள்முன்னணித் தலைவர்

கோலாகலமாகக் காட்சியளித்தது. இவரது வருகைக்கு வர்ணபகவானும் ஆதரவளிப்பது போன்று ஒருமணி நேரம் கடுமையான மழை பெய்து வெய்யிலின் கொடுமையையும் சூட்டையும் தணித்து கிளிநொச்சி நகரைக்குளிர்ச்சியாக்கியது.

கிளிநொச்சி நகருக்குவருகை

## பயிலுநர் ஆசிரியர் நியமனம்

## தீவுப் பகுதி மக்களுக்கு உதவி

(வேலணை)

1983 மே மாதம் முதல் 1990 ஜனவரி 15ஆம்திகதிக்குள்ளாக தீவுப்பகுதியில் குறிப்பாக நெடுந்தீவு, நயினாதீவு. எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, வேலணை, மண்டைதீவு போன்ற இடங்களில்நடந்த சம்பவங்களின்

பாக வானொலியில் உரையாற்

மக்கள் தாயகத்திற்கு வெளியே வசிப்பதாக கூறினர். இக் கூட்டத்தில் கலந்துகொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ கே. குஜரால் அரபுப் பகுதிகளில் யூதர்களை குடிய மர்த்துவது அரபுப் பகுதியில்

ஏற்பட்டு வரும் மாலைக்கண்

இஸ்ரேல் ஏற்கனவே ஆக்கிரமித்துள்ள சட்டவிரோத நடவடிக்கையுடன் சேர்ந்தது என்ற யசீர் அரபாத்தின் கருத்தை ஏற்றுக்கொண்டார்.

யை நீக்கும் மருந்துகளைப் பெறுவதற்கு முயற்சிகள் செய்து வருகின்றார். இவரது சேவைக்கு வேலணை மக்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். (15)

கொலம்பியாவில் இயங்கி வரும் நான்கு முக்கிய கெரில்லா இயங்கங்களில் ஒன்றான எம். 19 கெரில்லாக்கள் சென்ற வெள்ளியன்று, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வைபவத்தில், தாம் நிராயுதபாணிகளாகித் தம்மை உத்தியோகபூர்வமான அரசியல் கட்சியாக மாற்றிக் கொள்ள சங்கற்பம் எடுத்துள்ளார்கள். இக் கெரில்லா அமைப்பு 800 பேரை அங்கத்தினராகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

1985 இல் இக்கெரில்லாக்கள் பொகொட்டாவில் நீதி மாளிகையைத் தாக்கித் தம் வசமாக்கிக் கொண்டனர். இத்தாக்குதல் சம்பவத்தின் போது 100 பேர் உயிரிழந்ததாகச் சொல்லப்படுகிறது.

அரண்மனையில் ஒப்பந்தம் கைச்சாத்தான பிறகு, ஜனாதிபதி வேர்ஜிலோ பார்க்கோ பேசுகையில், இவர்கள் ஒப்பந்தத்துக்கு கைச்சாத்திடுவதனால், தமது நோக்கத்தைக் கைவிட்டு விடுவார்கள் என்று சொல்வது தவறாகும் என்றார்.

வுள்ளார். தேர்தல் எதிர் வரும் ஞாயிறன்று நடைபெறும்.

வெள்ளியன்று நடந்த வைபவத்தில் கொலம்பியா ஜனாதிபதி பார்க்கோ, மற்ற அமைப்புகளும் ஆயுதங்களைக் கைவிடும்படி வேண்டுகோள் விடுத்தார்.

## நேர அட்டவணை தெரியாமல் பஸ் நிலையத்தில் மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நேர அட்டவணைகள் தெரியாமல் பயணிகள் டைம் கீப்பர்களை தேடி அலைகின்றனர். ஏனைய பஸ் நிலையங்களைப்போல நேர அட்டவணை இங்கு இல்லாததே இதற்கு காரணம்.

தூர இடங்களிலிருந்து வரும் பயணிகள் தமது இடங்களுக்கு திரும்பப் போவதற்கு எந்த இடத்தில் எந்த பஸ் நிற்கிறது எனத் தேடுகிறார்கள்.

ஒரு பஸ் புறப்படுவது குறித்து மத்திய பஸ்நிலைய அதிகாரிகளிடம் விசாரித்தால் டைம் கீப்பரிடம் கேட்கும்படி பொதுமக்களுக்கு கூறுகின்றனர்.

ஆனால் டைம்கீப்பர்களில் சிலர் தமது இருப்பிடங்களுக்குள் காணப்படுவதில்லை. அப்படி இருந்தாலும் பஸ் புறப்படும் நேரத்தை திட்டவட்டமாக கூறுவதில்லை.

ஏனைய பஸ் நிலையங்களைப்போல ஒலிபெருக்கி மூலம் நேர அட்டவணைகளை பொதுமக்களுக்கு தெரிவிக்கலாம் என்றும் பொதுமக்கள் கேட்கின்றனர்.

## மட்டக்களப்பு கிராமங்களில் நெடுமாறன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த ஒரு வார காலமாக தங்கியிருக்கும் தமிழக அரசியல் தலைவர் திரு. பி. நெடுமாறன் ஒருவார காலத்திற்குள் 25க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு விஜயம் செய்துள்ளார்.

மண்டூர், வாகரை, கொக்கட்டிச்சோலை, பொத்துவில் காரைதீவு உட்பட 25 கிராமங்கள் அடங்கும்.

இந்தியபடை, தமிழ்தேசிய இராணுவத்தினராலும் அழிக்கப்பட்ட உடமைகளையும் பார்வையிட்டதோடு பாதிக்கப்பட்ட மக்களுடன் உரையாடி விபரங்களை கேட்டறிந்து கொண்டார். (37)

# மக்கள் முன்னணி தலைவர்களுக்கு கிளிநொச்சியில் வரவேற்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது கவின்கலைக் கல்லூரியைத் திறந்து வைப்பதற்காக கிளிநொச்சிக்கு வருகை தந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மாத்தயாவுக்கு கிளிநொச்சி மக்கள் மகத்தான வரவேற்பளித்தனர்.

மக்கள்முன்னணித் தலைவர் பதவி ஏற்றபின் முதலாவதாக கிளிநொச்சிக்கு விஜயம்செய்த தலைவர் மகேந்திரராசாவை வரவேற்பதற்காகக்கிளிநொச்சி நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.

வீதிகள் அலங்கரிக்கப்பட்டு கோலாகலமாகக் காட்சியளித்தது. இவரது வருகைக்கு வர்ணபகவானும் ஆதரவளிப்பது போன்று ஒருமணி நேரம் கடுமையான மழை பெய்து வெய்யிலின் கொடுமையையும் சூட்டையும் தணித்து கிளிநொச்சி நகரைக்குளிர்ச்சியாக்கியது.

கிளிநொச்சி நகருக்குவருகை தரவுள்ள தலைவரையும் பொதுச் செயலாளர் யோகியையும் வரவேற்பதற்காக கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது பொதுமக்கள் வீதியின் இருமருங்கிலும் திரண்டு நின்றனர்.

## பயிலுநர் ஆசிரியர் நியமனம்

(வடமராட்சி கிழக்கு)

கிளிநொச்சி கல்வி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய பயிலுநர்கள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நியமனத்தை ஏற்கவுள்ளார்கள்.

நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் போது, அவர்களுக்கான பாடசாலைகள் தெரியவரும்.

## தீவுப் பகுதி மக்களுக்கு உதவி

(வேலணை)

1983 மே மாதம் முதல் 1990 ஜனவரி 15ஆம் திகதிக்குள்ளாக தீவுப்பகுதியில் குறிப்பாக நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்துறை, வேலணை, மண்டைதீவு போன்ற இடங்களில்நடந்த சம்பவங்களின் போது இறந்தவர்கள், ஊனமுற்றவர்கள் பற்றிய தகவல்களைவேலணை அகதிகள்புனர்வாழ்வு கழக கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவருடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

# அதிக நிலங்களில் நெற்செய்கை விளைச்சலும் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1989 90 ஆண்டு பெரும்போக வேளாண்மை செய்கை 82 சதவீதமான காணிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த சிலவருடங்களாக இம்மாவட்டம் அமைதியற்ற சூழ்நிலை காரணமாக 60சதவீதமான காணிகளில் மட்டும் தான் வேளாண்மை செய்யப்பட்டது.

இவ்வருடம் விவசாய திணைக்களம் 65சதவீதமான காணிகளில் செய்கை பண்ணப்படலாம் என எதிர்பார்த்தபோதிலும் எதிர்பார்ப்பு 22 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இம்மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மை செய்கைக்காக 82,000 ஏக்கரில் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்த்த போதிலும் 1,04265 ஏக்கரில் செய்யப்பட்டன. எதிர்பார்த்த தொகையை விட 20சதவீதம் அதிகரிப்பாகும்.

கடந்தவருடம் பெரும்போக வேளாண்மை செய்கை 84745 ஏக்கர் செய்கைபண்ணப்பட்டன. இவ்வருடம் 19520 ஏக்கர் அதிகமாக செய்யப்பட்டன.

த[illegible]து பெரும்போக [illegible]ண்மை அறுவடை நடை[illegible] வருகின்றன. சராசரி [illegible]சல் கடந்த காலங்களில் ஏக்கருக்கு 65புசல் ஆகும். இவ்வருடம் 75 புசலாக அதிகரித்துள்ளது.

உள்ளூர் விதைநெல், சிறந்த நீர்ப்பாசனம், நோய்த்தாக்கம் இன்மை போன்ற காரணங்களினால் விளைச்சல் அதிகரிப்பு என விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாயிகளிடமிருந்து தனியார் போட்டி போட்டு கிலோ ரூபா 6 விலை கொடுத்து கொள்வனவு செய்கிறார்கள். (37)

## யாழ். முஸ்லிம் விவாக பதிவாளர்களை நியமிக்கு[illegible]

### முஸ்லிம் சனசமூக நிலையம் வேண்டுகோ[illegible]

(யாழ்ப்பாணம்)

யாழ். முஸ்லிம் வட்டாரத்தில்5 திருமணப் பதிவாளர்கள் கடமையாற்றிய இடத்தில் தற்போது ஒரேயொரு பதிவாளர் மட்டுமே கடமை புரிகின்றார். சட்ட ரீதியான கலாச்சார ரீதியான நடைமுறைகளில் ஏற்படும் சிரமங்களை கருதிற் கொண்டு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் 115ஆம் அத்தியாயம் 9 (2)ஆம் பிரிவின் கீழ் தற்காலிக பதிவாளர் ஒருவரை நியமித்து நெருக்கடியைத் தவிர்க்குமாறும், அத்தோடு திருமணப் பதிவாளர் நிரந்தர நி[illegible] மனத்திற்கு சனத்தொகையைக் கருத்திற் கொண்டு ஐந்து பேரை நியமிக்குமாறு வேண்டி யாழ். முஸ்லிம் சனசமூக நிலையம் யாழ். அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்றை வரைந்துள்ளது. மேற்படி நிரந்தர நியமனத்திற்கான விண்ணப்பம் 27-7-1989 இல் கோரப்பட்ட போதிலும் இது கால வரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடதக்கது.

## யாழ். நகர் வீதியெங்கும் ரியூப்லைற்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் ரியூப் லைற் பொருத்தப்படும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகரசபை நிர்வாகத்துக்குரிய பகுதி வீதிகள் எல்லாம் விஸ்தரிக்கப்படும் என்று மின்சாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தகால வன்செயலினால் மின்சாரக் கம்பிகள்' கம்பங்கள் பல காணாமல் போய்விட்டன. மீண்டும் காணாமல்போன கம்பிகளையும், கம்பங்களையும் அமைக்க வேண்டியுள்ளது. இதனால் மேற்படி செய்யப்படும் புனரமைப்பு வேலைகளில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

தற்போது பஸ் நிலையப் பகுதி, ஸ்ரான்லி வீதியில் சில யார் தூரம், மின்சார நிலைய வீதியில் சில யார் தூரம், ஆஸ்பத்திரி வீதியில் அரைவாசிப்பகுதி, காங்கேசன்துறை வீதியில் சில யார் தூரம் வரை ரியூப் பல்ப் பொருத்தப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (தி)

## மீண்டும் மின் ஒளி

(பருத்தித்துறை)

நெல்லியடி பட்டினசபைக் குட்பட்ட வீதிகளில் மீண்டும் இரவு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அண்மைக்காலமாக இரவு நேரம் இருளில் மூழ்கியிருந்த நெல்லியடி, கரவெட்டி, வதிரி, கரணவாய் பகுதிகளில் மீண்டும் வெளிச்சம் பெற்றுள்ளது. (25)

## படை புகுந்த பண்ணையில் கோழிகள் மிஞ்சவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சத்துருகொண்டான் அரச கோழிப் பண்ணையில் தமிழ் தேசிய இராணுவம் மேற்கொண்ட உயிர் அழிப்பு பெறுமதி ரூபா 20,000. உடைமை அழிப்பு பெறுமதி ரூபா 50,000 ஆகும்.

மேற்படி கோழிப்பண்ணையில் தமிழ் தேசிய இராணுவம் தங்கியிருந்து சகல கோழிகளையும் அபகரித்து சமைத்து சாப்பிட்டுள்ளனர்.

பண்ணையின் உடமைகள் யாவும் இவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளதாக பண்ணை அதிகாரியொருவர் தெரிவித்தார். (37)

## நந்தியின் 'நம்பிக்கைகள்' நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நவீன இலக்கியங்களைப் பொறுத்த மட்டில் உலகில் எந்த இலக்கியங்களுக்கும் கிடையாத ஒரு விசேட அம்சம் உண்டு அதாவது இந்த இலக்கியத்திற்கென்றே சிறப்பாக உள்ளவர்கள் மாத்திரம் அல்லாது பல்வேறு துறைகளில் உள்ளவர்களும் எழுதுவதே இந்த நவீன இலக்கியமாகும். இவ்வாறு பேராசிரியர் சிவத்தம்பி யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற நந்தியின் 'நம்பிக்கைள்' நாவல் வெளியீட்டு விழாவின்போது பேசுகையில் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கலைவட்டம் ஒழுங்கு செய்திருந்த இவ் விழாவில் திரு சிவத்தம்பி மேலும் பேசுகையில் கூறியதாவது:

புலவன் ஒருவன் பாரம்பரிய மரபுகளைக் கையாள்வான் ஆனால் எழுத்தாளனோ அவன் எத்துறை சார்ந்தவனாய் உள்ளானோ, அவனுக்கு எத்துறையில் கூடுதலான ஈடுபாடு உள்ளதோ அது சார்ந்ததாய்த்தான் அவனுடைய படைப்புக்கள் அமைந்திருக்கும் இந்த வகையில்தான் செக்கோவ் குரோனின் வரிசையில் எழுத்தாளர் நந்தியும் மனிதர்களுடைய பிரச்சினைகளில் ஈடுபடும் அதேவேளை அவர்களுடைய கதைகளுக்கு ஓர் அசாதாரணமான வலுவையும் உண்டாக்குகிறார்கள் என்றார்.

மேலும் இவ்வைபவத்திற்கு சித்திரலேகா மௌனகுரு, கலாநிதி ந. சுப்பிரமணியம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர், திரு. சொக்கலிங்கம் நன்றி கூறினார்.

## வல்லிபுர ஆலய தர்மகர்த்தா சபை

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவராகக் கணக்காளர் திரு. இ, அன்னலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செயலாளராக திரு. வீ.எஸ். தேவதாஸன் தெரிவானார். உறுப்பினர்களாக திரு. ஜெ. இராஜலிங்கம், திரு. எஸ். வல்லிபுரம், திரு. கே. சபாரத்தினம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்

மகாசபைத் தலைவராகத் திரு எஸ். எம். கந்தசாமி தெரிவானார். எஸ். கந்தப்பு உறுப்பினராகத்தெரிவானார். திருப்பணிச் சபை உறுப்பினர்களாகத் திரு. என். பாக்கியநாதன், திரு. எஸ் இராசேந்திரம், திரு. எஸ். அமிர்தலிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (25)

## கம்பியூட்டர் பயிற்சி

**SUPER BASIC, BASIC**

புதிய பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும்

17- 03- 1990 சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதில் இருபாலாருக்கும் தனித்தனி வகுப்புக்கள் நடத்தப்படும்.

பயிற்சி முடிவில் பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

விபரங்கட்கு:

**U. C. M. A ACADEMY**

ஆஸ்பத்திரி சந்தி, அச்சுவேலி.

(B -234)


6ஆவது திருத்தத்தை நீக்கினால்

# மலையகத்தினரும் தனிநாடு கேட்பாராம்-அஷ்ரப்

(கொழும்பு)

உயர் கல்வி அமைச்சர் ஏ.சி,எஸ்சாகுல் ஹமீட் வடக்கு -கிழக்கு மாகாணங்களின் எதிர்கால அரசியல் நிலை குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தனித் தனியே பேசவுள்ளார் எனத் தெரிய வருகிறது. பேச்சு வார்த்தைகளின் போது சட்டமும் ஒழுங்கும், குடியேற்றம், ஒப்பங்கேட்டல், விடுதலைப் புலிகள் முன்வைத்த 6ஆவது சட்ட மூலத் திருத்தம் ஆகியன தொர்பாக ஆலோசிக்கப்படுமாம்

தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்களில் சமாதானத்தையும், வாழ்க்கையின சகஜ நிலையைக் கொணரவும் பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனும், குழுக்களுடனும் தாம் பேச்சு வார்த்தை நடாத்த இருப்பதாக ஹமீட் தெரிவித்தார்.

6-வது சட்ட மூலம் நீக்கம் தொடர்பான விடுதலைப் புலிகள் முன்வைத்த யோசனைகள் தொடர்பாகக் கேட்ட போது, ''இந்த விஷயத்தில் தான் சகல கட்சிகளினதும் ஆலோசனையைக் கேட்க உள்ளேன். பேச்சுவார்த்தைகளின் போது முக்கிய இடத்தைப் பெறும் விஷயங்களில் இதுவும் ஒன்று'' என்றார் உயர் கல்வி அமைச்சர் ஹமீட்.

வடக்கிலும்-கிழக்கிலும்சமாதானக் குழு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சி தொடர்பாக எலவே ஏ. சி. எஸ். ஹமீட், புலிகளின் அரசியல்கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, ஈ. பி. ஆர். எல், எவ், ஈ. என். டி. எல். எவ், ரெலோ, புளொட், ஈரோசின் அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணியுடனும் தனித்தனியே பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

வடக்கிலும் கிழக்கிலும் மறுபடியும் சமாதானத்தை நிலவச் செய்வது முக்கியமானதென்றும், எல்லாக் கட்சிகளுடனும் கலந்துரையாடி, கட்சிகளின் ஒத்துழைப்புடன் சமாதானத்தை நிலவச் செய்ய தான் முயற்சி எடுக்க இருப்பதாக அமைச்சர் ஹமீட் தெரிவித்தார்.

வரலாற்றுப் பின்னணியுள்ள 6ஆவது சட்டத்தை நீக்குவது பற்றி தாம் மிகக் கரிசனையாக இருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம் எச் அஸ்ரப் தெரிவித்தார்,

6ஆவது சட்டத்தை நீக்கியதும் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்கள் 'தமிழ் ஈழம்' கேட்பதுபோல் மலையகத் தமிழர்கள் மலைநாட்டைக் கேட்பார்கள், அதே போல் கண்டியில் உள்ளவர்களும் தமது தனித்துவத்தை முன்வைத்துத் தமக்கென்று ஒரு நாட்டைக் கேட்பார்கள் தமது வளங்களான பெருந் தோட்டப் பயிர்களால் கிடைக்கும் வருமானத்தை நாம் ஏன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்பதோடு தமக்கென்று ஒரு தனி நாட்டையும் கேட்கலாம் - இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப் தெரிவித்தார்.

அமைச்சர் ஹமீட் ஏற்கனவே லிபரல் கட்சியுடன் இது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உடற்பயிற்சிப் போட்டியில் மீண்டும் வெற்றி

(விசேட நிருபர்)

குருநகர் கொத்தணிப்பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் யாழ். புனித யேப்ஸ் மகளிர் பாடசாலை 19 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

17, 13 வயதுகளுக்கு உட்பட்டோர் அணிகள் இரண்டாம் இடங்களைப் பெற்று, தமது நிலையை இரண்டாவது தடவையாகவும் தக்க வைத்துக் கொண்டனர் .(21)

## புதிய ஆலயம்

(சுழிபுரம்)

தொல்புரம் துரையன்வளவு பிள்ளையார் ஆலயத்திற்கு சுமார் ஆறுலட்சம் ரூபா செலவில் புதிய ஆலயம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. தான்தோன்றியாக சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் உருவானதாகக் கூறப்படும் இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக பிள்ளையார் விளங்குகிறார். எதிர்வரும் சித்திரை மாதத்தில் இவ் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகம்நடைபெறுமென பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (17)


ஈழநாதமாக இன்று தமிழ் மக்கள் மத்தியில்
புதுப்பொலிவுடன் வெளிவருவதையிட்டு
பெருமகிழ்ச்சியடைகின்றோம்.
காலையில் அச்சுவேலி பஸ் நிலைய முன்பாக
மக்கள் அடிபட்டு உன் செய்திகளை
படிப்பதைப் பார்க்கும்போது
உனக்கு மக்கள் மத்தியில் எவ்வளவு
செல்வாக்கு இருக்கின்றது என்பதை
நாம் எமது கண்ணோட்டத்தில்
காணக்கூடியதாகவுள்ளது.
வாழ்க, வளர்க உன் நாமம்!

## றதனி மொடன்ஸ்

வாகன மோட்டோர் உதிரிப்பாகங்கள்
பெயின்ற் வகைகள், பற்றரி சார்ச்
போன்றவற்றிற்கு
நம்பிக்கையின் சின்னங்கள்தான்

## றதனி மொடன்ஸ்

அச்சுவேலி. (B. 285)


புங்குடுதீவு

## பாரதி சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டிடம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பாரதி சனசமூக நிலைய புதிய கட்டிடம் சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்நிலையத்தின் முற்போக்கான சேவையைக் கருத்திற்கொண்டு உள்ளூராட்சி பிரதேச உதவி ஆணையாளர் திரு. டிவகலாளா அவர்களின் சிபார்சின் பேரில் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி புதிய கட்டிடத்திற்கான அத்திவாரக் கல் நாட்டப்பட்டு நிர்மாண வேலைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (22)

## சுகாதாரப் பகுதியின் பதவியுயர்வு பரீட்சை

(மட்டக்களப்பு)

சுகாதார அமைச்சு உப வைத்திய சேவையில் ii (ஆ) இல் கடமையாற்றுவோர் தரம் ii(அ)க்கு பதவ் உயர்வு பெறுவதற்கான தடை தாண்டல் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் தற்போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கோரியுள்ளார்.

பாடசாலை பற்சிகிற்சையாளர்கள் ஈ. சி. ஜீ பதிவாளர், புற்றுநோய் தொழில்நுட்ப உதவியாளர், ஒக்குபேஷனர் த்ரப்பிஸ்ற், பௌதீக சிகிச்சையாளர், நுனுக்காட்டி பரிசோதகர், (MICROSCOPIST) ஆகியோரிடமிருந்து இவ் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

01 - 01 - 1988 முன்பு தரம் ii பரீட்சை சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். முன்பு தரம் iii புதிய ii (ஆ) சித்திபெற்றவர்கள், நிபந்தனையுடன் ii(அ) பதவி உயர்வு பெற்றவர்களும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதியடையவர்களாகுகிறார்கள்.

விண்ணப்பங்கள் ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்பு அனுப்புதல் வேண்டும். (37)

## லண்டனில் தமிழீழ அபிவிருத்திக் மகாநாடு

(லண்டன்)

தமிழீழத்தின் அபிவிருத்தி ஆய்வுதொடர்பான மகாநாடு ஒன்று லண்டன் மாநகரில் எதிர்வரும் மார்ச் 24, 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. சாமான்ய மக்கள், தமிழீழத்தின் சமூக - பொருளாதார அபிவிருத்தியில் தமது முழுமையான பங்கை வழங்குவதற்கான வழிவகைகளை ஆராய்வதே இக் கருத்தரங்கின் முக்கிய நோக்கமாகும்.

இம் மகாநாட்டை லண்டனை மையமாகக் கொண்டியங்கும் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழீழ அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கும் சகல மனிதநேய நிறுவனங்களும், புத்திஜீவிகளும், துறைசார்ந்த நிபுணர்களும் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளலாம்.


## ஈழநாதமே

உன் செய்தி உலகெங்கும்

பரவட்டும்

வாழ்க உன் நாமம் வளர்க

உன் ஏடு

## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

**1990 -- 91**

பேராதனை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப்பட்டப் பாடநெறிகளான.

- கலைமாணி **B. A.**
- விஞ்ஞானமாணி **B. Sc.** (புள்ளிவிபரவியல்)
- வணிகமாணி **B. Com.**

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்,

புதிய பிரிவு விரிவுரைகள்

**1—4—1990** இல் ஆரம்பமாகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி **20. 4. 1990**

வளர்க ஈழநாதம்!

## குறிஞ்சி மெடிக்கல்ஸ்

பரமேஸ்வரா சந்தி,

திருநெல்வேலி.


## முறைப்பாட்டுப் பெட்டிகள்

(தீவுப்பகுதி)

# நதனி மோடன்ஸ்

அச்சுவேலி. (B. 285)


கான சேவையைக் கருத்திற் கொண்டு உள்ளூராட்சி பிர

வேலைகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன. (22)

பெறுவதற்கான தடை தாண் டல் பரீட்சைக்கான விண் ணப்பங்கள் தற்போது சுகா தார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கோரியுள்ளார்.

பாடசாலை பற்சிகிற்சை யாளர்கள் ஈ. சி. ஜீ பதிவா ளர், புற்றுநோய் தொழில் நுட்ப உதவியாளர், ஒக்கு பேஷனர் த்ரப்பிஸ்ற், பௌ தீக சிகிச்சையாளர், நுனு க்

ii பரீட்சை சித்தியடைந்தவர் களும் விண்ணப்பிக்கலாம். முன்பு தரம் iii புதிய ii (ஆ) சித்திபெற்றவர்கள், நிபந்த னையுடன் ii(அ) பதவி உயர்வு பெற்றவர்களும் இப் பரீட் சைக்கு விண்ணப்பிக்க தகுதி யடையவர்களாகுகிறார்கள்.

விண்ணப்பங்கள் ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்பு அனுப் புதல் வேண்டும். (37)

ளது. சாமான்ய மக்கள், தமி ழீழத்தின் சமூக - பொருளா தார அபிவிருத்தியில் தமது முழுமையான பங்கை வழங்கு வதற்கான வழிவகைகளை ஆராய்வதே இக் கருத்தரங் கின் முக்கிய நோக்கமாகும்.

இம் மகாநாட்டை லண் டனை மையமாகக் கொண்டி யங்கும் தமிழீழ ஆய்வு நிறுவ னம் ஒழுங்கு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழீழ அபிவிருத்திக்கு ஒத் துழைப்பு வழங்கும் சகல மனிதநேய நிறுவனங்களும், புத்திஜீவிகளும், துறைசார்ந்த நிபுணர்களும் இம் மகாநாட் டில் கலந்து கொள்ளலாம்.


## வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

**1990 -- 91**

பேராதனை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப்பட்டப் பாடநெறிகளான.

- கலைமாணி B. A.
- விஞ்ஞானமாணி B. Sc. (புள்ளிவிபரவியல்)
- வணிகமாணி B. Com.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்,

புதிய பிரிவு விரிவுரைகள்
**1—4—1990** இல் ஆரம்பமாகின்றன.
விண்ணப்ப முடிவுத் திகதி **20. 4. 1990**

உதவிப் பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மாணவர் கவனத்திற்கு:

★ வணிகமாணி பட்டப்பாட நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 15. 3. 1990க்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

★ பல்கலைக்கழகங்களின் முன்னணி விரிவுரையாளர்கள் விரிவுரைகளை வழங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ்நகரில் இதுவே,

(B. 128)



வளர்க ஈழநாதம்!

## குறிஞ்சி மெடிக்கல்ஸ்

பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

எங்களிடம் சகலவிதமான ஆங்கில மருந்து வகைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

(B. 241)


## முறைப்பாட்டுப் பெட்டிகள்

(தீவுப்பகுதி)

மக்களின் முறைப்பாடுகள், குறை, நிறைகளை அறியும் பொருட்டு முறைப்பாட்டுப் பெட்டிகளைமுக்கியஇடங்கள் தோறும் வைக்கும் நடவடிக் கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஈடுபட்டுள் ளது. இந்தரீதியில் தீவுப்பகுதி யிலும் இம்முறைப்பாட்டுப் பெட்டிகள் வைக்கப்பட உள்ளது.


## ஈழநாதமே

உன் செய்தி உலகெங்கும்
பரவட்டும்
வாழ்க உன் நாமம் வளர்க
உன் ஏடு

# குகன் இன்ஸ்ரிரியூட்

அச்சுவேலி - இடைக்காடு

(B/238)



எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி
ஆம்!
இன்று தான் நிம்மதி!

இளைஞர் பாடங்களை தொடர்ந்து படிக்காமல் இன்று சந்தோச முகத்துடன் பாடங்களை படிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இக்கல்வி தொடர வேண்டுமென இறைவனை பிராகத்திக்கின்றோம்.

# கல்வி நிலையம்

(அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
அச்சுவேலி

(B.236)


## மெய்வல்லுனர் போட்டி

(வடமராட்சி கிழக்கு)

உடுத்துறை கொத்தணி பாடசாலைகளின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி செவ் வாய்க்கிழமை 13ஆம் திகதி வீரக்களி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் கலந்து கொள்வார்.


**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**



**ஈழநாதம்** என்றும் புதுப் பொலிவுடன் நீ வெளிவருகின்றாய்! நீ தினமும் வெளிவர வேண்டும் உன் நாதம் வீணைபோல் உலக மக்களுக்கு இசைக்க வேண்டும். வாழ்க உன்பணி!

## ஸ்ரீ கிருஸ்ணா இன்டஸ்ரீஸ்

தேங்காய் எண்ணெய், பிண்ணாக்கு உற்பத்தியாளர்கள்

**எம்மிடம்:** தரமான, சுத்தமான தேங்காய் எண்ணெய், பிண்ணாக்கு நிதானமான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

[கிழமை நாட்களில் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்]

# ஸ்ரீ கிருஸ்ணா இன்டஸ்ரீஸ்

இல. 7, 8, கைத்தொழில் பேட்டை
அச்சுவேலி.

தொலைபேசி: 226

B-233



ஈழ மண்[illegible]ரித்த வீரவேங்கைகளுக்கு
எமது இதய அஞ்ச[illegible]லிகள்

எம்மிடம்: பவுடர் வகைகள், கண்ணாடி வகைகள், சவர்க்கார வகைகள், குழந்தைகளுக்கு பால் கரைத்துக் கொடுக்கும் பால் பருக்கும் Feeink Bottls, மற்றும் அன்றாட தேவைகளுக்கு ஏற்ற பொருட்களையும், நம்பிக்கையுடன்

பெறவேண்டிய இடம்

# சிவகாந்தா ஸ்ரோர்ஸ்

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(R. 237)

## சிந்தனைக்கு

உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச் செல்வானென்று
அப்பால் நாற் கூற்றே மருந்து.

- திருவள்ளுவர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 13 - 03 - 90

# செத்துப்போன எக்ஸ்ரே கருவிகள்

யாழ்ப்பாணம் அரசினர் மருத்துவமனையில் - மன்னிக்கவும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒரேயொரு 'எக்ஸ்-ரே' கருவிதான் இயங்கிக் கொண்டிருக்கிறதாம்.

நான்கு 'எக்ஸ்-ரே' கருவிகளில் மூன்று இயக்கமின்றிச் செத்துக் கிடக்கின்றனவாம். 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இக் கருவிகளைப் பழுதுபார்ப்பதற்குக் கொழும்பிலிருந்து நிபுணர்கள் வந்துபோவார்களென்றும் கடந்த ஏழு ஆண்டுகளாக நிபுணர்கள் வராமையால் இக் கருவிகள் இயக்கமற்றுக் கிடப்பதாகவும் மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யாழ்ப்பாணத்துக்கு மட்டும் உரியதல்ல. யாழ். மாவட்டத்தில் காரைநகர், பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறை, கிளிநொச்சி மாவட்டம், வவுனியா மாவட்டம்வரை வடபகுதி மக்கள் அனைவருக்குமே "உயிர் காக்கும்" மருத்துவமனையாகவும் விளங்குகிறது.

தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களும்கூட நோய் ஆபத்தான கட்டத்தை அடைந்துவிட்டால் யாழ். போதனா மருந்துவமனைக்கே கொண்டு போய்ச் சேர்க்கப்படுவதுண்டு.

வைத்திய சாதனங்கள் அத்தியாவசிய மருந்துகள் இப் போதனா வைத்தியசாலையில் இருந்து வந்ததும் வைத்திய நிபுணர்களின் கண்காணிப்புக் கிடைக்குமென்ற நம்பிக்கையுமே இதற்குக் காரணம்.

கடந்த சில வருடங்களில் நாட்டில் நடந்த சம்பவங்கள் காரணமாக அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் வைத்திய நிபுணர்களும் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டதால் அவர்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

யாழ். போதனா மருத்துவமனையில் மருத்துவ சாதனங்கள், உபகரணங்கள் இன்னமும் இருக்கின்றன

# சுதந்திர பாலஸ்தீன நாடு

(நேற்றய தொடர்ச்சி)

1978இல் தென் லெபனானில் உள்ள பி. எல். ஓ. நிலையங்களுக்கு எதிராகப் பெரிய அளவிலானயுத்தத்தை மேற்கொண்ட இஸ்ரேல். அங்கிருந்து 3 மாதங்களின் பின்னரே தனது படைகளைத் திருப்பியழைத்தது. 1981இல் பெக்காப் பள்ளத்தாக்கில் சிரியா சாம் ஏவு கணைகளை அமைத்ததால் இஸ்ரேல் இந் நிலைகளைத் தாக்கிய பின்னர் பெய்ரூட் நகரைக் கைப்பற்றியது. பெய்ரூட் நகரைச் சுற்றிவளைத்தபோது இதற்குள் 6000-10,000 இடைப்பட்ட எண்ணிக்கை பி. எல். ஓ. கெரிலாக்கள் அகப்பட்டுக் கொண்டனர். பின்னர் அமெரிக்காவின் இராஜிக முயற்சியினால் பி. எல். ஓ. தலைமயகமும் போராளிகளும் அங்கிருந்து ரியூசியாவுக்கு இடம் பெயர்ந்தனர்.

1983 வரையில் லெபனானில் இஸரேல் படைகளை பின்வாங்கிய போதும், அது தென் லெபனானில் தனது செல்வாக்கைக் கிறிஸ்தவப் படைகள் மூலம் செலுத்தியது. இஸ்ரேல் லெபனானில் நிலை கொண்டுள்ள ஏனைய அரபுப்படைகள் அங்கிருந்து வெளியேற வேண்டுமென்று வலியுறுத்தியபோதும் சிரியப்படைகள் தொடர்ந்தும் அங்கு நிலைகொண்டிருப்பது கவனிக்கத்தக்கது. இதனால் இஸ்ரேல் லெபனானிலுள்ள கிறிஸ்துவ. லிபியா முஸ்லீம் பிரிவினரைத் தனது செல்வாக்குக்குட்படுத்த முயற்சித்த போதும், அதில் ஆரம்பத்தில் கிடைத்த ஆதரவு இப்போது கிடைக்கவில்லை. வில்புல்லா பிரிவினர் ஈரானில் ஏற்பட்ட அரசியல் மாற்றம்போல் லெபனானிலும் ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பி நிற்கின்றார்கள். லெபனானில் லிற்றானி ஆற்றுக்குத் தெற்காகவுள்ள பகுதிகளில் இஸ்ரேல் தலையீடு செய்வது குறித்தும், பாலஸ்தீன அகதிகள் பிரச்சினையின் விளைவாக வெளிநாட்டுப் படைகள் நிலைகொள்ளும் இடமாகவும், உள் நாட்டில் கிறிஸ்துத முஸ்லீம்களுக்கிடையில் இருந்த அரசியல் நல்வறவு சீர்குலைந்து வரும் அழிவுக்குட்பட்ட நாடாகவும் திகழ்கின்றது.

1987ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட காஸா மேற்குக்கரைப்பகுதிகளில்

டுகளை நோக்குவோம்.

1948இல் பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு பாலஸ்தீனர் எதிராகவும், யூதர்கள் சாதகமாகவும் இருந்தனர். இன்று இவ்விரு பகுதியினரின் நிலைகள் அவர்களது அன்றைய நிலைப்படுகளுக்கு நேர்மாறாக உள்ளன. இன்று அராபியர் பாலஸ்தீனத்தில் தமக்கு ஒருநாடு அமைக்கப்போராடும் பொழுது அதனை இஸ்ரேலியர் எதிர்த்து நிற்கின்றனர். கடந்த 40 வருடங்களாக தங்களுக்காகத் தம் அயல் அராபிய சகோதர நாடுகள் நேரடியாக இஸ்ரேலுடன் யுத்தம் செய்து ஒரு விடிவைத் தோற்றிவிக்காத நிலையில் தாங்களே வன்முறையற்ற முறையில் இஸ்ரேலுடன் போராடித் தமது தாய்நாட்டை மீட்கப் பாலஸ்தீன மக்கள் முயற்சிக்கிறார்கள். பாலஸ்தீனத்தை உருவாக்கி இஸ்ரேல் நாட்டையும் அங்கீகரித்து இரு நாடுகளுக்கிடையிலான பல பிரச்சினைகளுக்கு நடைமுறைத்தீர்வு காணலாமென்பது பெரும்பான்மைப் பாலஸ்தீனரின் நம்பிக்கையாகவுள்ளது. ஜெருசலம் நகரின் அந்தஸ்து காஸாவிலிருந்து மேற்குக் கரைக்கு இஸ்ரேல் வழியாகப் போக்குவரத்து, அகதிகள் புனர்வழ்வு, மீள்வருகை போன்றன இரு நாடுகளுக்கிடையிலான முக்கிய பிரச்சினைகளாகவுள்ளன. மேலும் இஸ்ரேல் 1967ஆம் ஆண்டு எல்லைக்குத் திரும்ப வேண்டும், காஸா மேற்குக்கரையில் அமைக்கப்பட்டுள்ள யூதக் குடியிருப்புகள் அகற்றப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டில் பாலஸ்தீனர் கடுமையாக இருக்கின்றனர்.

பாலஸ்தீனப் பகுதியில் மீதவாந்த பாரம்பரிய தலைமைத்துவத்தை ஆதரிப்பவர்கள், பாலஸ்தீன விடுதலை இயக்க நிலைப்பாட்டை ஆதரிப்பவர்கள், கடின போக்குள்ள தலைமைத்துவத்தை ஆதரிப்பவர்கள் என மூன்றுவகை நிலைப்பாடு கொண்டவர்கள் காணப்படுகின்ற

னைக்குத் தீர்வு காண விரும்புகிறது. பாலஸ்தீனத்தில் கடின கோட்பாட்டாளர்களின் செல்வாக்கு இன்னும் குறைந்துவிடவில்லை. இவர்கள் ஸியோனிஸ இஸ்ரேலை அழித்து, அரோபியர்களும், யூதர்களும் வாழும் பிரதேசமாகப் பாலஸ்தீனத்தை உருவாக்க வேண்டுமென்று கருது

உரிமை கோரலாமென்றும் இஸ்ரேல் அஞ்சுகின்றது. பாலஸ்தீன அரசு உருவாகுமிடத்து இஸ்ரேலுக்குள் பல மான அரபு சிறுபான்மையினர் மேலும் அந்நியப்பட்டு பாலஸ்தீனருடன் தொடர்புகொள்ள முற்படுவார்கள் எனவும் இஸ்ரேல் கருதுகின்றது. மற்றும் காஸாவிலிருந்து மேற்குக் கரைக்கு இஸ்ரேல் நிலப்பரப்பூடாகப் போக்குவரத்து இடம்பெற வேண்டிய நிலையேற்படும். மத்திய தரைக் கடலிலுள்ள காஸாத்துறை முகம் பாலஸ்தீனத்தினதும், ஜோடானினதும் முக்கிய

தொடர்ந்தும் இருக்க வழி கிடைக்குமென்றும் இஸ்ரேலின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான தொழிலாளர் சந்தை, மூலப்பொருட்கள் வளங்கும் பகுதிகளாக காஸா, மேற்குக்கரை தொடர்ந்து இருக்குமென்றும் இஸ்ரேல் கருதுகிறது. காஸா, மேற்குக்கரைப் பகுதிகளையும், மக்களையும் தனது ஆட்சியின் கீழ் வைத்திருப்பது தனது பாதுகாப்பு, பொருளாதார நடவடிக்கைகளுக்கு

# அமைக்க இடமில்லை - இஸ்ரேல்

கின்றனர். முன்ளர் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் இதே கருத்தைத்தான கொண்டிருந்தது இவ்வியக்கத்திலிருந்து பிரிந்து சென்று அபுநிடால் போன்ற கடின கோட்பாட்டாளர்கள்தான் பயங்கரவாதம், வன்செயல் மூலம் இஸ்ரேலை முறியடிக்க வேண்டும் அல்லது இஸ்ரேலுக்கு எதிராக தொடர்ச்சியான தொல்லை கொடுக்க வேண்டுமென்று விரும்புகின்றனர். இவர்களுக்கு சிரியா, லிபியா அல்ஜீரியா நாடுகளின் உதவி ஓரளவு கிடைத்துள்ளன. தற்பொழுது காஸா, மேற்குக் கரையோரப் பகுதிகளில் இன்னொரு பிரிவான முஸ்லீம் அடிப்படைவாத இயக்கம் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டுமென முனைகின்றது. பாலஸ்தீனத்தில் அமால் என்ற முஸ்லீம் அடிப்படைவாத இயக்கத்துக்குப் பாலஸ்தீன மக்கள் மத்தியில் 30 வீத ஆதரவு இருக்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கம் ஈரானின் ஆதரவுடன் செயற்படுவதாகக்கருத இடமுண்டு.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் எத்தகைய பேச்சிலும் கலந்துகொள்ள அது

துறைமுகமாக மாறும். மேற்குறிப்பிட்ட காரணங்களால் சுதந்திரமான பாலஸ்தீனமொன்று ஏற்படுவதை இஸ்ரேல் விரும்பவில்லை. இங்கு மாற்று அரசியற் தீர்வாக விருப்பு ஒழுங்கில் பின்வரும் முறைகளில் ஒன்றில் பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புகிறது.

காஸா மேற்குக்கரை (ஜெருசலம் தவிர்ந்து) ஆகிய இரு பகுதிகளையும் இஸ்ரேல் நாட்டின் ஒரு பகுதியாக்கி, இவ்விரு பகுதிகளுக்கும்பொதுவானதொரு, அல்லது தனித்தனியான இரண்டு தன்னாதிக்கப் பரப்புக்களை அமைத்து அதனை அராபியர்களை ஏற்கவைப்பது. இதன் மூலம் இப்பிரதேசங்களின்உள்ளூர் விவகாரங்களை அராபியர்களிடம் விட்டுவிட்டு பாதுகாப்பு மற்றும் மத்திய அரசிற்குரிய சில முக்கிய பொறுப்புக்களை தன்னிடம் வைத்திருக்கலாமென்று இஸ்ரேல் கருதுகின்றது. இத்தீர்வு மூலம் காஸா, மேற்குக்கரையைத் தனது ஆட்சியின் கீழ் வைத்திருக்கலாமென்று ஜோர்டான் இஸ்ரேலின் கிழக்கெல்லையாக இருக்குமென்றும், காஸாவிலும். மேற்குக்கரையிலும் யூதக் குடியிருப்புக்கள்

சாதகமாக அமையுமென இஸ்ரேல் கருதுகிறது. இதனால் ஜோர்டான் ஆற்று ஓரமாக உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஒழுங்கமைப்புக்களைத் தொடர்ந்தும் வைத்திருக்கலாமென்றும், இதன் மூலம் ஜோர்டானுக்கும் மேற்குக் கரைக்குமுள்ள தொடர்பினை கட்டுப்படுத்தலாமென்றும் நாட்டின் சர்வதேச எல்லையின் நீளமும் குறைக்கப்பட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் இலகுவாக்கப்படலாமென்றும் இஸ்ரேல் எதிர்பார்க்கின்றது.

மேலே முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வு அராபியர்களால் ஏற்கப்படாதவிடத்து காஸா, மேற்குக்கரைப்பகுதிகளை ஜோர்டானுடன், நேசக்கூட்டமைவு இணைப்பாட்சி அல்லது தனிநாட்சி ஒழுங்கின் அடிப்படையில் இணைத்து அதன்மூலம் அரசியல் தீர்வொன்றைக்காண முற்படுகல் மேற்குக்கரைப்பகுதி 1949-1967 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஜோர்டானின் பகுதியாகவிருந்தது. காஸாப் பகுதியில் வாழும் மக்களும் பாலஸ்தீனர்கள் இதனால் இவ்விரு பகுதிகளையும் சேர்த்து பாலஸ்தீன மக்கள் ஒரே ஆட்சியின் கீழ் ஒன்றாக விருக்க விரும்புவர்.

(நாளை தொடரும்)

**காஸா, மேற்குக் கரையை உள்ளடக்கிய சுதந்திரமான பூரண இறைமை கொண்ட பாலஸ்தீன நாட்டை தனது 1967 ஆம் ஆண்டு எல்லைக்கும் ஜோர்டான் நாட்டிற்கும் இடையில் அமைக்க இடமில்லையென இஸ்ரேல் கருதுகின்றது.**

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph. d. Durham**

மனையாகவும் விளங்குகிறது.

தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களும்கூட நோய் ஆபத்தான கட்டத்தை அடைந்துவிட்டால் யாழ். போதனா மருந்துவமனைக்கே கொண்டு போய்ச் சேர்க்கப்படுவதுண்டு.

வைத்திய சாதனங்கள் அத்தியாவசிய மருந்துகள் இப் போதனா வைத்தியசாலையில் இருந்து வந்ததும் வைத்திய நிபுணர்களின் கண்காணிப்புக் கிடைக்குமென்ற நம்பிக்கையுமே இதற்குக் காரணம்.

கடந்த சில வருடங்களில் நாட்டில் நடந்த சம்பவங்கள் காரணமாக அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் வைத்திய நிபுணர்களும் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டதால் அவர்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

யாழ். போதனா மருத்துவமனையில் மருத்துவ சாதனங்கள், உபகரணங்கள் இன்னமும் இருக்கின்றன என்ற நம்பிக்கை மக்களுக்கு இன்னமும் உண்டு.

இச் சமயத்தில் முக்கியமான "எக்ஸ்-ரே" கருவிகள் மூன்று இயங்காமல் கிடப்பதாகவும் ஒரு கருவி மட்டுமே இயங்குவதாகவும் வெளிவந்த செய்தி யாழ். போதனா மருத்துவமனை மீதுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்துவிடும்.

நோயாளியின் உடலிலுள்ள உறுப்புக்களில் ஏற்பட்டுள்ள நோயைச் சுலபமாகவும் தெளிவாகவும் கண்டுபிடிப்பதற்கு "எக்ஸ்-ரே" மிக முக்கியமானது.

'எக்ஸ்-ரே" கருவி இல்லையென்றால் நாடி பிடித்துப் பார்த்து வைத்தியம் செய்வதற்கு நாட்டு வைத்தியரிடம் போகலாமே! போதனா மருத்துவமனைக்குள் ஏன் போக வேண்டும்?

1983 ஆம் ஆண்டின் பின்னர் சிறிலங்கா இராணுவத்தின் 'ஷெல்' அடிக்குச் சிறிது பாதுகாப்பை போதனா மருத்துவமனை அனுபவிக்கவேண்டியிருந்தது. ஆனால் 1987 - ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மருத்துவமனைக்குள் புகுந்த இந்திய இராணுவம் பல உயிர்களைப் பலி கொண்டதுடன் மருத்துவமனைக்குப் பெரும் சேதத்தையும் ஏற்படுத்தியது.

இந்திய இராணுவத்தின் துணையோடு வடக்கு கிழக்கு மாகாண சபையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தவர்கள் மருத்துவத்துறையில் பெரும் முன்னேற்றமடைந்துள்ள இந்தியாவிடமிருந்தே நவீன சாதனங்களைப் பெற்றிருக்கலாம்.

சேதப்படுத்தியவர்களைக்கொண்டே நஷ்ட ஈடாக மருந்துவமனையைப் புனரமைத்திருக்கலாம்.

வடக்கு கிழக்கு மாகாண சபைக்குக் கோடிக் கணக்கில் உதவி செய்ததாக இந்தியா கூறி வந்தது. இப்பணத்தில் ஒரு சிறுதுளியைச் செலவிட்டிருந்தாலும் நான்கு புதிய நவீன எக்ஸ்-ரேகளை வாங்கியிருக்கலாமே!

இதை இனிச் சொல்லி என்ன பயன்?

யாழ், போதனா மருத்துவமனை நிர்வாகம் சுகாதார அமைச்சுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருப்பதால் காரியம் ஆகாது. நேரில் சென்றாவது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

---

ரவு இப்போது கிடைக்கவில்லை. வில்புல்லா பிரிவினர் ஈரானில் ஏற்பட்ட அரசியல் மாற்றம்போல் லெபனானிலும் ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பி நிற்கின்றார்கள். லெபனானில் லிற்றானி ஆற்றுக்குத் தெற்காகவுள்ள பகுதிகளில் இஸ்ரேல் தலையீடு செய்வது குறித்தும், பாலஸ்தீன அகதிகள் பிரச்சினையின் விளைவாக வெளிநாட்டுப் படைகள் நிலைகொள்ளும் இடமாகவும், உள்நாட்டில் கிறிஸ்துத முஸ்லீம்களுக்கிடையில் இருந்த அரசியல் நல்லுறவு சீர்குலைந்து வரும் அழிவுக்குட்பட்ட நாடாகவும் திகழ்கின்றது.

1987ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலிருந்து இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட காஸா மேற்குக்கரைப் பகுதிகளில் ஏற்பட்ட பாலஸ்தீனர்களின் கிளர்ச்சி அமைதியின்மையைத் தொடர்ந்து பாலஸ்தீனரின் சுதந்திரப், தன்னாட்சிக் கோரிக்கைகள் வலுப் பெற்றுள்ளன. இக் கிளர்ச்சியைத் தொடர்ந்து பாலஸ்தீனரின் சுதந்திரப் போராட்டத்தில் புதிய திருப்பமேற்பட்டது. பிறரை நம்பியிராது தாங்களே தமது சுதந்திரத்துக்காகப் போராட முன்வந்தனர். பாலஸ்தீனத்தில் பெண்களும், குழந்தைகளும் இஸ்ரேல் படையினருடன் கற்போர் நிகழ்த்தலாயினர் இவர்களது சுதந்திரப் போராட்டத்தில் 1988இல் மேலுமொரு திருப்பமேற்பட்டது. 1988நவம்பர் 15ஆம் திகதி அல்ஜீரியாவில் கூட்டப்பட்ட பாலஸ்தீன தேசிய சபையின் விசேட கூட்டத்தில் பாலஸ்தீன சுதந்திரப் பிரகடனம் வெளியிடப்பட்டது. இதனைத்தொடர்ந்து உலகின் பெரும்பான்மையான நாடுகள் பாலஸ்தீனத்தை அங்கீகரித்து கவனிக்கத்தக்கது. மேலும் ஐக்கியநாடுகள் சபையில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் அவதானிகள் அந்தஸ்த்தைப் பெற்றிருந்தபோதும் சபையின் பல உறுப்பு நிறுவனங்களில் அங்கத்துவம் பெற அது முயற்சித்து வருகிறது. சர்வதேசரீதியில் பாலஸ்தீனத்திற்கு அங்கீகாரம் அந்தஸ்தும் கிட்டியபோதும் அங்கு இஸ்ரேல் ஆட்சி தொடர்ந்து நடைபெறுகின்றது. எனினும் பாலஸ்தீனம் இஸ்ரேலை அங்கீசரிப்பதாகவும் தான் வன்செயல்களைக் கைவிடுவதாகவும் கூறுயிருப்பது முக்கிய திருப்பங்களாகும் பாலஸ்தீனம் குறித்து சர்வதேச மாநாடு இடம்பெற வேண்டுமெனப் பல நாடுகள் விரும்புகின்றன. இந்நிலையில் பாலஸ்தீன அரசு குறித்து, பாலஸ்தீனம் இஸ்ரேல், அராபிய, அமெரிக்க மற்றும் சர்வதேச நிலைப்பா

போக்குவரத்து, ஆக்கிரமி... புனர்வாழ்வு, மீள் வருகை போன்றன இரு நாடுகளுக்கிடையிலான முக்கிய பிரச்சினைகளாகவுள்ளன. மேலும் இஸ்ரேல் 1967ஆம் ஆண்டு எல்லைக்குத் திரும்ப வேண்டும், காஸா மேற்குக்கரையில் அமைக்கப்பட்டுள்ள யூதக் குடியிருப்புகள் அகற்றப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டில் பாலஸ்தீனர் கடுமையாக இருக்கின்றனர்.

பாலஸ்தீனப் பகுதியில் மிதவாத பாரம்பரிய தலைமைத்துவத்தை ஆதரிப்பவர்கள், பாலஸ்தீன விடுதலை இயக்க நிலைப்பாட்டை ஆதரிப்பவர்கள், கடின போக்குள்ள தலைமைத்துவத்தை ஆதரிப்பவர்கள் என மூன்றுவகை நிலைப்பாடு கொண்டவர்கள் காணப்படுகின்றனர்.

பாலஸ்தீனத்திலுள்ள மிதவாத போக்கினர் சுதந்திர பாலஸ்தீனம் விரையில் கிட்டாதாயின் ஜோர்டான் அல்லது இஸ்ரேல் மூலம் அரசியல் தீர்வைக்காண விரும்புகின்றனர். இவர்களுக்கு இஸ்ரேல் ஜோர்டான், அமெரிக்க ஆதரவு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கிட்டுகின்றது. சுதந்திர நாட்டிற்கு மாற்றுத் தீர்வாக காஸா, மேற்குக் கரைப்பகுதிகளில் தன்னாட்சிப் பகிர்வை ஏற்கக் கூடியவர்களாகவுள்ளனர். இப்பிரிவினரை ஸ்தரப்படுத்த இஸ்ரேல் காலத்துக்குக்காலம் முயற்சி எடுத்துவருவதும், தீவிரவாதிகள் இம்மிதவாதப் போக்குத் தலைவர்கள் இஸ்ரேலுக்கு உடந்தையாக விருந்து வேலை செய்பவர்கள் என அவர்களைப் பழிவாங்கிவருவதும் குறிப்பிடத்தக்கன. பாலஸ்தீனத்தில் தற்பொழுது இடம்பெறும் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வந்து மிதவாதப் பிரிவினரிடம் தன்னாட்சியைக் கொடுக்க இஸ்ரேல் விரும்புகிறது.

பாலஸ்தீன விடுதலைஇயக்க ஆதரவாளர்கள் பாலஸ்தீனத்தில் கூடுதலாக இருப்பதாகக் கருக இடமுண்டு. மேலும் இவ்வியக்கத்தையே பாலஸ்தீனத்தின் குரல் எனப் பல நாடுகளும், சர்வதேச நிறுவனங்களும் அங்கீகரித்துள்ளன. இவ்விடுதலை இயக்கம் காஸா, மேற்குக்கரை, கிழக்கு ஜெருசலம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியபாலஸ்தீனத்தை முழு இறைமை கொண்ட ஒரு அரசாக நிறுவ முன்நிற்கிறது. முன்னர் இவ்வியக்கம் அல்பற்றா பிரிவின் மூலம் வன்செயலிலும் பயங்கரவாதத்திலும் ஈடுபட்டிருந்த பொழுது சமாதானப் பேச்சு வார்த்தை இராஜீக அழுத்தம் மூலமாகவோ பாலஸ்தீனப் பிரச்சி

னொரு பிரிவான முஸ்லீம் அடிப்படைவாத இயக்கம் அமைத்து அதனை அராபியர் கடளை ஏற்கவைப்பது. இதன் அடிப்படையில் இணைத்து

## பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph. d. Durham

ஆயுதம் ஏந்திப் போராட வேண்டுமென முனைகின்றது. பாலஸ்தீனத்தில் அமால் என்ற முஸ்லீம் அடிப்படைவாத இயக்கத்துக்குப் பாலஸ்தீன மக்கள் மத்தியில் 30 வீத ஆதரவு இருக்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கம் ஈரானின் ஆதரவுடன் செயற்படுவதாகக்கருத இடமுண்டு

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் எத்தகைய பேச்சிலும் கலந்துகொள்ள அது மறுத்துவருகின்றது. சர்வதேச அரங்கில் பல நாடுகள் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பாலஸ்தீனத்தின் முறையான பிரதிநிதியெனக் கொண்டு இதன் தலைவர் திரு யசீர் அரபாத்துக்கு ஒரு நாட்டின் தலைவருக்குரிய மரியாதையையும் கொடுத்து வருகின்ற பொழுதும் இஸ்ரேல் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமென்று இது இஸ்ரேலை அழிக்க வேண்டுமென்ற முன்னைய நிலைப்பாட்டிலிருந்து இன்னும் உண்மையான மனமாற்றத்துக்குள்ளாகவில்லையெனவும் கருதுகின்றது. இதனால் பி. எல். ஓவுடனோ ஏனைய சடினபோக்குள்ள இயக்கங்களுடனோ தொடர்பு கொள்ள விரும்பவில்லை. பாலஸ்தீனத்தின் உண்மையான பிரதிநிதிகளாகவும் ஏற்கவில்லை.

காஸா, மேற்குக் கரையை உள்ளடக்கிய சுதந்திரமான பூரண இறமை கொண்ட பாலஸ்தீன நாட்டை தனது 1967ஆம் ஆண்டு எல்லைக்கும் ஜோர்டான நாட்டிற்கும் இடையில் அமைக்க இடமில்லையென இஸ்ரேல் கருதுகின்றது.

இப்பிராந்தியத்தில் புதிய பாலஸ்தீன நாடு உருவாக்கப்பட்டால், இது இயங்கக்கூடிய வளங்களைப் பெற்றிருக்காததால் பலவீனமான அரசாக மாறி இப் பிராந்தி[illegible] மேலும் ஸ்திரத்தன்மை[illegible] தோற்றுவிக்குமென்று [illegible] இஸ்ரேல் கருதுகிறது. மேலும் இப்பிராந்தியத்தில் சர்வதேச தலையீடுகள் அதிகரிக்கும் என்றும் நாளடைவில் பாலஸ்தீனத்துக்கும், இஸ்ரேலுக்கு மிடையில் பல விடயங்கள் குறத்துப் பல பிரச்சினை எழலாமென்றும், இஸ்ரேல் முழுவதையும் அல்லது அதன் சில பகுதிகளைப் பாலஸ்தீனம்

மூலம் இப்பிரதேசங்களின்உள்ளூர் விவகாரங்களை அராபியர்களிடம் விட்டுவிட்டு பாதுகாப்பு மற்றும் மத்திய அரசிற்குரிய சில முக்கிய பொறுப்புக்களை தன்னிடம் வைத்திருக்கலாமென்று இஸ்ரேல் கருதுகின்றது. இத்தீர்வு மூலம் காஸா, மேற்குக்கரையைத் தனது ஆட்சியின் கீழ் வைத்திருக்கலாமென்று ஜோர்டான் இஸ்ரேலின் கிழக்கெல்லையாக இருக்குமென்றும், காஸாவிலும். மேற்குக்கரையிலும் யூதக் குடியிருப்புக்கள்

அதன்மூலம் அரசியல் தீர்வொன்றைக்காண முற்படுகல் மேற்குக்கரைப்பகுதி 1949-1967 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஜோர்டானின் பகுதியாகவிருந்தது. காஸாப் பகுதியில் வாழும் மக்களும் பாலஸ்தீனர்கள் இதனால் இவ்விரு பகுதிகளையும் சேர்த்து பாலஸ்தீன மக்கள் ஒரே ஆட்சியின் கீழ் ஒன்றாக விருக்க விரும்புவர்.

(நாளை தொடரும்)

---

## [illegible]த்திரங்களில் இன்னும் கைச்சாத்திட வில்லையாம்

ஈழநாதம்
யாழ்ப்பாணம்.

தங்கள் பத்திரிகையில் பிறப்பு இறப்புச் சாட்சிப் பத்திரம் வழங்குவது சம்பந்தமாக மக்கள் படல் பகுதியில் பார்வையிட்டேன்.

யாழ். செயலகம் ஆமை வேகத்தில் பிறப்பு இறப்புச் சாட்சிப்பத்திரங்களை வழங்கிக் கொண்டிருக்கிறது.

நான் சென்ற 9-11-89, 2,11,89 ஆகிய திகதிகளில் A36738-42 A34725-26 ஆகிய விண்ணப்பங்கள் கச்சேரியில் கொடுத்து பற்றுச் சீட்டும் பெற்றேன் இது வரை பிறப்புசாட்சிப் பத்திரங்கள் எனக்கு கிடைக்கவில்லை. இது பற்றி இந்தவாரம் 6.3.90 இல் கச்சேரியில் விசாரித்த போது மேற்படி அலுவலகத்தில்உள்ள எழுதுவிளைஞர்கூறினார்.

"பத்து ஆயிரத்துக்கு மேற்பட்ட விண்ணப்டங்களை பதி

## [illegible]க்கள் மடல்

[illegible]ளரினால் கையொப்பம் [illegible]ப்படாமல் இருக்கின்றன. இன்னும் இருமாதத்திற்கு மேலாகும் உங்கள் பிறப்புச் சாட்சிப் பத்திரம் அனுப்புவதற்கு" என்றார். அவசிய தேவைக்கு பிறப்பு, இறப்பு, சாட்சிப் பத்திரம் பெறுவது யாழ்- செயலகத்தில் முடியாத காரியமாகும்

தற்பொழுது இயல்பு நிலைக்கு அலுவலகங்கள் வந்தும் ஏன் இந்த தாமதம்?

செல்வாக்குப் பயன்படுத்த எல்லோருக்கும் இயலாத காரியம் அல்லவா? ஈழநாதம் உண்மையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

ந. அரியரத்தினம்
நீர்வேலி

---

## மண் அள்ளத் தடை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் அனுமதியில்லாது சட்டவிரோதமாகதேவையற்ற இடங்களில்மண் அள்ளுவதினை தமிழீழ விடுதலைப் புலிகள் தடை செய்துள்ளார்கள்.

மணல்காடு, குடத்தனை, நாகர்கோவில், செம்பியன்பற்று, தாளையடி, உடுத்துறை, ஆழியவளை ஆகிய இடங்களில் வீதிகளுக்கு அண்மையில் பல இடங்களில் மண் அள்ளப்பட்டமையினால் அப்பகுதியில் உள்ள வீதிகள் சேதமடைந்துள்ளமையுடன், இப்பகுதியின் சூழலில் எதிர்காலத்தில் பாரிய விளைவுகள் ஏற்படக்கூடிய அபாய நிலையும் காணப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கில் வீதியிலிருந்து 150 அடிக்கு அப்பால் மண் அள்ளுவதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களின் மட்டுமே அனுமதியுடன் மண் அள்ள முடியும்.

ஈழநாதம்

# பாண்டவர், ராமனைப் போல் புலிகளும் வனவாசம் சென்றனர்

## இனித் தமிழரின் எதிர்காலம் சுபீட்சமே!

(சித்தங்கேணி)

மகாபாரதத்தில் பாண்டவர்கள் வனவாசஞ் சென்று மீண்டார்கள். இராமாயணத்தில், இராமன் பதின்நான்கு வருடங்கள் கானகம் சென்று மீண்டான். விடுதலைப் புலிகளும் பிரபாகரன் தலைமையில் இரண்டு வருடங்கள் காட்டிற்குச் சென்று திரும்பி இருக்கிறார்கள். எனவே தமிழ் மக்களின் எதிர்காலம் விடுதலைப் புலிகளின் வனவாசத்தைத் தொடர்ந்து சுபீட்சமடையும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் கலாசாரப் பிரிவினர் நவாலி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடத்திய கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றிய மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை இணை உப அதிபர் திரு. ஆ. கல்யாண சுந்தரேசன் குறிப்பிட்டார். திரு. கல்யாண சுந்தரேசன் தொடர்ந்து கூறியதாவது.

இன்று எங்கு பார்த்தாலும் விடுதலைப் புலிகள் மயமாகவே இருக்கிறது, அந்தளவிற்குப் புலிகள் பலம் பெற்று விட்டார்கள். இன்று பொது மக்கள் என்றால் புலிகள், புலிகள் என்றால் பொதுமக்கள் என்ற நிலை உருவாகி விட்டது.

விடுதலைப் புலிகள் கட்டுப்பாடானவர்கள் ஒழுக்கமானவர்கள், இலட்சியவேட்கை மிக்கவர்கள், இதனாலேயே இன்று விடுதலைப் புலிகள் மக்கள் இயக்கமாக வளர்ச்சி பெற்றுள்ளார்கள். (23)

## முஸ்லிம்களின் குறைபாடுகளை நீக்க ஆணையாளர் இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் எதிர் நோக்கப்படும் சுகாதார, வீதி பரிபாலன, வடிகாலமைப்பு, மின்சார குறைபாடுகள் சம்பந்தமாக மேற்படி சன சமூக நிலையத்தின் வேண்டுகோளின் பேரில் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடல் சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ் மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்தில் இடம் பெற்றது. இக் கலந்துரையாடலின் போது சம்பந்தப்பட்ட நிர்வாகப்பிரிவுகளின் உயரதிகாரிகளும் நிலையத்தின் நிர்வாக குழுவினரும் சமூகம்அளித்திருந்தனர். நிர்வாக குழுவினரால் சுட்டிக் காட்டப்பட்ட மேற்கண்ட குறைபாடுகளைப் பற்றி மிக அவதானமாகசெவிமடுத்த யாழ் மாநகர சபை ஆணையாளர் அக் குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்து தருவதாக வாக்குறுதியளித்ததோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரைகளையும் வழங்கியுள்ளார்.

### 500 பட்டதாரிகளுக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில்உள்ளநாற்பது வயதுக்குட்பட்ட பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இத்துடன் விசேட சேவை உத்தியோகஸ்தர், முகாமைத்துவ நிர்வாக பயிற்சி நெறி போன்ற வெற்றிடங்களுக்கும் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சுமார் 500 பேருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ)

## தீவுப் பகுதிக்கு அம்புலன்ஸ் படகு தேவை

(தீவுப்பகுதி)

நெடுந்தீவு, எழுவைதீவு, அனலைதீவு மக்களின் நீண்டநாள் குறைபாடுகளில் ஒன்றான அம்புலன்ஸ் படகுச் சேவை ஒன்றை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்றும், இதற்கு ஏதுவாக அம்புலன்ஸ் படகொன்றை பெற்றுக் கொடுக்க இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முன் வர வேண்டுமென இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வேலணைப் பிரதிநிதி திரு. செ. வரதலிங்கம் வேலணையில் நடைபெற்ற வைபவ மொன்றில் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார். மேற்படி குறைபாட்டினால் தீவுகளில் வதிப் போருக்கு கடுமையான நோய்கள் ஏற்படும் போது அவசர சிகிச்சைக்காக யாழ்ப்பாணத்திற்கோ, ஊர்காவற்துறைக்கோ கொண்டு செல்வதில் அதிக சிரம மேற்பட்டு வருகின்றது. இதுபற்றி இப்பகுதி மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் முறையிட்டுள்ளனர். (15)

# எமது உள் விவகாரத்தில் வெளியார் தலையிடுவதை அரசு பொறுக்காது

## -- ஜனாதிபதி வெங்கட்ராமன்

''ஜம்மு கஷ்மீர் நமது நாட்டுடன் இணைந்து விட்ட ஒரு பகுதி. எமது நாட்டின் உள் விவகாரங்களில் வேறு எவரும் குறுக்கிடுவதை நமது அரசு பொறுத்துக் கொள்ளாது'' என்று ராஷ்டிரபதி ஆர். வெங்கட்ராமன் பிரகடனப் படுத்தி இருக்கிறார்.

புதுடில்லியில் பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் தொடக்க நாளான நேற்று இரு தரப்புக்களின் கலப்புக் கூட்டத்தில் உரையாற்றிய ராஷ்டிரபதி ''அந்நிய சக்திகள் எல்லைகளுக்கு அப்பாலிருந்து ஊடுருவல் நிகழ்த்தி, பயங்கர வாதத்தை ஊக்கப்படுத்தி பிரச்சினையை உலக அளவில் பெரிதுபடுத்த முயல்வது குறித்து அவர்கவலைதெரிவித்தார். இத்தகைய சக்திகளுக்கு எதிராக அரசு எப்பொழுதுமே உறுதியாகச் செயல்பட்டு வந்திருக்கின்றது என்றார் அவர்.

கடந்த சில ஆண்டுகளில் சீர் கெட்டுவிட்ட ஜம்மு கஷ்மீர் நிலமை தொடர்ந்து மோசமாக இருக்கின்றது என்று கூறிய அவர், மக்களின் நியாயமான துயரங்கள் யாவற்றையும் களைந்திடவும், மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளை நிறைவு படுத்திடவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்றார்.

மேலும் பேசுகையில் பஞ்சாப் பிரச்சினை பற்றி தமதுரையில் குறிப்பிட்ட ஆர். வெங்கட்ராமன் அந்த மாநிலத்தில் இயல்பு நிலையை மீண்டும் ஏற்படுத்தி, மக்களின நலன்களில் நம்பிக்கையைத் தோற்றுவிக்க அரசு உயர் முன்னுரிமை அளிக்கின்றது என்று கூறினார். பஞ்சாப் மாநில அரசு உறுதியாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ளும். பயங்கரவாதத்திற்கும் பிரிவினை வாதத்திற்கும் அடிபணிந்து விடாது என்று அவர் சொன்னார். இராமர் பிறந்த இடம் பாபர் மசூதி பிரச்சினை பற்றிப் பேசிய இராஷ்டிரபதி அந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண புதிய முன் முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றார்.

சிறுபான்மை மக்களுக்கு இது பாதுகாப்பளிக்க எல்லா வகையிலும் அரசு முயலும். தேசிய ஒற்றுமையை வலுப்படுத்த மாநிலங்களுக்கு இடையிலான சபை ஏற்படுத்தப் பட்டுள்ளது. பிராந்திய மற்றும் சர்வதேச சூழலுக்கு ஏற்ப பொருத்தமான நெடுங்காலக் கொள்கையை உருவாக்க, தேசிய பந்தோபஸ் சபையை ஏற்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது என இராஷ்டிரபதி கூறினார். நமது சபைகள் கட்டுக் கோப்புக்கள் குலையாமல் இருக்கின்றன. எந்த ஓர் அந்நிய அச்சுறுத்தல்களையும் சமாளிக்க நாடு முழுத் தயாராகவுள்ளது என்று மக்களுக்கு உறுதி மொழி கூறினார்.

## சனசமூக நிலையங்களுக்கு ஆணையாளர் விஜயம்செய்வர்

யாழ். மாவட்டத்திலுள்ள பதினான்கு சனசமூகநிலையங்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் விஜயம் செய்வார்.

அத்துடன் இந்த சனசமூக நிலையங்களுக்குஏழுலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு உட்பட்ட ஒப்பந்த வேலைகளை வழங்கலாமெமன உதவி உள்ளூராட்சி ஆணையாளர் சுற்று நிருபம் ஒன்றை சகல திணைக்களங்களுக்கும் அனுப்பவுள்ளார்.

இத்தகவல்களை சனசமூக நிலையங்களின் சம்மேளனக் கூட்டத்தில் பேசிய சம்மேளனத் தலைவர் திரு. சி. தவகோபால் கூறினார்

உபசெயலாளர் திரு. வை. செகராசசிங்கம் நன்றி கூறினார்.

## சட்டவிரோத ஒளிபரப்பை நிறுத்துமாறு கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

எதிவரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை முடியும் வரை சட்டவிரோத தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவையை நிறுத்துமாறுகல்விமான்கள் பெற்றோர், பழைய மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட எமது பிள்ளைகள் தற்போது நிலமை வழமைக்கு திரும்பியிருப்பதால் தமது கல்வியைத் தொடர இந்த தொலைக்காட்சி சேவை பெரிதும் இடைஞ்சலாக இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சேவையால் பரீட்சைக்கு ஆயத்தம் செய்ய முடியாமலும், மனதை கல்வியில் செலுத்த முடியாமலும் பிள்ளைகள் இருக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### கடமைக்குதிரும்பாவிடில் வேலை பறிபோகும்

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள கோட்டைக் கச்சேரியில் வேலை செய்பவர்கள் சென்ற வருடம் சித்திரை மாதம் 13 ஆம் திகதியிலிருந்து வேலைக்குப் போகவில்லை. அரசாங்க அதிபர் கச்சேரியில் வேலை செய்து தற்பொழுது வேலைக்குப் போகாதுள்ள அனைத்து ஊழியர்களும் நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுள் வேலைக்குத் திரும்ப வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார். இக்கால அவகாசத்தில் வேலைக்குத் திரும்பாதவர்கள் தங்கள் வேலைகளை இழந்தவர்களாகக் கருதப்படுவர் என அவர் தெரிவித்தார்.

### 87 முதல்....

(1 ஆம் பக்சத் தொடர்ச்சி)

அக்காலப் பகுதியில் லிபேறேசன் ஒப்றேசன், இந்திய இராணுவம் வந்து நிலைகொண்டிருந்தமை. மக்கள் இக்காலகட்டத்தில் தமது வீடு வாசல்களை விட்டு புகலிடம் தேடி ஓடினர்.

பின்பு வீடுகளுக்கு மீண்டபோது நின்ற, பனை, தென்னை, பலா, மா, என்பன தறிக்கப்பட்டு, இராணுவம்

### பெரு நாள்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்திக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

பெருமாள் தன்னிச்சையாக சுதந்திர ஈழத்தைப் பிரகடனம் செய்ததைத்தொடர்ந்து, கடைகளை ஆயுதம் தாங்கிய குழுக்கள் கொள்ளையடிக்கக் கூடும் என அஞ்சி, நகைக் கடைகள், வியாபார நிலையங்களை நிரந்தரமாகப் பூட்டி வைத்திருப்பதாகத் தெரிய

### கசிப்பை ஒழிக்க நடவடிக்கை

(புங்குடுதீவு)

தெங்கு பனம்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின 'புங்குடுதீவு கிளை' இப்

### தொழிற்சங்க..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையில் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட தளபதி திரு. டொமினிக் அவர்கள் தெரிவித்தார். இக்கூட்டத்திற்கு தெங்கு பனம்பொருள் உற்பத்தியாளர்கள், முகாமையாளர்கள், கணக்காளர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டனர்.

மேலும் திரு டொமினிக் அவர்கள் பேசுகையில் இன்றைய சூழலில் பார்வைக்கு சுதந்திரமாகத் தென்பட்டாலும் மக்களால் தமக்கு எந்நேரத்தில் என்ன நடக்குமோ என்று புரியாத நிலை இருக்கின்ற தருணத்தில் நாம் சிவில் நிர்வாகம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். ஆகவே ஸ்தாபனங்களாக சென்று அவற்றின் மூலமாக இந்த சமூகத்தை சீர் செய்யவேண்டிய நிலைக்கு நாம் உள்ளாக்கப்பட்டுள்ளோம்.

மேலும் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடந்துவரும் இன்றைய காலகட்டத்தில் இலங்கை அரசுமீது நம்பிக்கை வைத்தோ அல்லது இலங்கை அரசு மனம் மாறிவிட்டது என்றோ அல்லது அது தமிழர் நலனில் புதிய அக்கறை கொண்டுள்ளது என்று நாம் எண்ணியோ

பெற்றது. இக் கலந்துரையாடலின் போது சம்பந்தப் காரிகளுக்கு பணிப்புரைகளையும் வழங்கியுள்ளார்.

மக்கள் இயக்கமாக வளர்ச்சி பெற்றுள்ளார்கள். (23)

## 500 பட்டதாரிகளுக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில்உள்ளநாற்பது வயதுக்குட்பட்ட பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இத்துடன் விசேட சேவை உத்தியோகஸ்தர், முகாமைத்துவ நிர்வாக பயிற்சி நெறி போன்ற வெற்றிடங்களுக்கும் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சுமார் 500 பேருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(தி)

## தீவுப் பகுதிக்கு அம்புலன்ஸ் படகு தேவை

(தீவுப்பகுதி)

நெடுந்தீவு, எழுவைதீவு, அனலைதீவு மக்களின் நீண்டநாள் குறைபாடுகளில் ஒன்றான அம்புலன்ஸ் படகுச் சேவை ஒன்றை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்றும், இதற்கு ஏதுவாக அம்புலன்ஸ் படகொன்றை பெற்றுக் கொடுக்க இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முன் வர வேண்டுமென இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வேலணைப் பிரதிநிதி திரு. செ. வரதலிங்கம் வேலணையில் நடைபெற்ற வைபவமொன்றில் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார். மேற்படி குறைபாட்டினால் தீவுகளில் வதிப் போருக்கு கடுமையான நோய்கள் ஏற்படும் போது அவசர சிகிச்சைக்காக யாழ்ப்பாணத்திற்கோ, ஊர்காவற்துறைக்கோ கொண்டு செல்வதில் அதிக சிரமமேற்பட்டு வருகின்றது. இதுபற்றி இப்பகுதி மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் முறையிட்டுள்ளனர். (15)

## போக்கு வரத்து ஒழுங்குமுறை பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பதினெட்டாம் திகதி யாழ். மாநகரசபை எல்லைக்குள் போக்குவரத்து, வாகன ஒழுங்கு முறை சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்று நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கலந்துரையாடலுக்கு, மாநகரசபை ஆணையாளரால், யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலால, மறறும் கல்லூரி அதிபர்கள், சனசமூக நிலையங்களின் சமாஜ உறுப்பினர்கள், வ.பிராந்திய போக்குவரத்துசபை உத்தியோகத்தர்கள், மினிபஸ்சங்க உறுப்பினர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள் போன்றோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாநகரசபையின் நிர்வாக எல்லைப் பகுதிக்குள் வாகனப் போக்குவரத்து, அதன் ஒழுங்குமுறை பற்றி முடிவு செய்யப்பட்டுள்ள தீர்மானங்கள் பற்றி இக் கலந்துரையாடலில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(தி)

## பளை மகா வித்தியாலயத்தில் சிறப்பான பரீட்சை முடிவுகள்

(பளை)

கடந்த 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் நேற்று வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வெளியாகின. இப் பரீட்சை முடிவுகளில் பளை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த முப்பத்தாறு மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவதற்கு தகுதி பெற்று, சாதனை நிலைநாட்டியுள்ளாக்கள்.

கலைப்பிரிவில் ஒருமாணவன் ஒரு Aயும் ஒரு Bயும் ஒரு Cயும், ஒரு Sயையும் பெற்றார். இரண்டு மாணவக்கள் ஒரு Bயும் இரண்டு Cயும் ஒரு Sயையும் பெற்றார். வர்த்தகப் பிரிவில் ஒரு மாணவன் ஒரு Aயும் ஒரு Bயும் இரண்டு Cயும் பெற்றார் மூன்று Bயும் ஒரு Cயும் ஒருமாணவன் பெற்றார் ஐந்து மாணவர்கள் ஒரு Bயும் இரண்டு Cயும், ஒரு S யையும் பெற்றார்கள்.

விஞ்ஞானப் பிரிவிலே ஒரு Aயும் ஒரு Cயும் இரண்டு S யையும் பெற்றார். [illegible]னொரு மாணவன் ஒரு [illegible] இரண்டு Cயும் ஒரு Sயை[illegible] பெற்றார்.

தமிழ் இந்து நகரிகம், [illegible]யியல்' தூய கணிதம் [illegible]ரயோக கணிதம், கணக்கியல் பாடங்கள் நூறுவீதம் மட்டுமல்ல, இப்பாடங்களில் A,B எடுத்ததோடு மற்றைய பாடங்களிலும்A,B கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### பின்கதவுப்-.--.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்தபோது,

'எனது மாற்றத்திற்கு சில ஆசிரியர்களின் பின்கதவுப் பேச்சும், அரசியல்சக்திகளுமே காரணம்' என்று தெரிவித்தார்.

இவரது இடமாற்றத்திற்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் சம்பந்தமிருப்பதாக விஷயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (தி)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

விடியலிற்கு வித்திட்ட உந்தன் விடுதலைப்பாதையிலே ஆயிரம் ஆயிரம் மகளிர்!

(()) !



செல்வி ஹெலன் (அனுஷியா)

(காரைநகர்)

வீரஜனனம்:23.03.1965 வீரமரணம்:13.03.1988

தீவக மக்கள்

R.42

தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவையை நிறுத்துமாறு கல்விமான்கள் பெற்றோர், பழைய மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட எமது பிள்ளைகள் தாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சேவையால் பரீட்சைக்கு ஆயத்தம் செய்ய முடியாமலும், மனதை கல்வியில் செலுத்த முடியாமலும் பிள்ளைகள் இருக்கிறார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### 87 முதல்....

(1 ஆம் பக்சத் தொடர்ச்சி)

அக்காலப் பகுதியில் லிபேறேசன் ஒப்றேசன், இந்திய இராணுவம் வந்து நிலை கொண்டிருந்தமை. மக்கள் இக்காலகட்டத்தில் தமது வீடு வாசல்களை விட்டு புகலிடம் தேடி ஓடினர்.

பின்பு வீடுகளுக்கு மீண்ட போது நின்ற, பனை, தென்னை, பலா, மா, என்பன தறிக்கப்பட்டு, இராணுவம் தமது பாதுகாப்பரண்களை அமைத்திருந்தனர்.

இந்திய இராணுவத்தாலும் அவர்களது உணவிற்கு வந்த ஆடுகளாலும் விவசாயச் செய்கை பாழ்பட்டது.

**மின்சாரம்**

இதே வேளை இராணுவம் ஆயுதக் கோஷடிகள் இருந்து 24 மணி நேரமும் தமது பாதுகாப்பிற்காக வெளிச்சம் போட்ட வீட்டுக்காரரிடமும் மின்சாரக் கட்டணம் அறவிடுதலும் ரத்துச் செய்ய வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### பெரு ாள்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்திக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

பெருமாள் தன்னிச்சையாக சுதந்திர ஈழத்தைப் பிரகடனம் செய்ததைத்தொடர்ந்து, கடைகளை ஆயுதம் தாங்கிய குழுக்கள் கொள்ளையடிக்கக் கூடும் என அஞ்சி, நகைக் கடைகள், வியாபார நிலையங்களை நிரந்தரமாகப் பூட்டி வைத்திருப்பதாகத் தெரிய வருகிறது. சில மாகாண அமைச்சர்களும், உயர் அதிகாரிகளும் தமக்கு போதிய பாதுகாப்பு ஒழுங்குகள் வழங்கினால் தாம் வேலைக்குத் திரும்புவதாகத் தெரிவித்துள்ளனர். இவ்வாறு ஆளுநர் நளின் செனிவரெத்தினா தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் கெருவாவில், பாலம்பட்டாறு, மூதூர் ஆகிய இடங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றனர். இவ்விடங்களில் எவ்வித சம்பவங்களும் நிகழவில்லையாம். இது இப்படியிருக்க, ஆளுநர்செனிவரத்தினா வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள நிலமையை அவதானித்து ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

சென்றவாரம் முற்பகுதியில், மக்கள் தொண்டர் படையைச் சேர்ந்தவர்களும், ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ், ரெலோ, புளொட் உறுப்பினர்கள், விடுதலைப் புலிகள் தம்மீது தாக்குதலை மேற்கொள்ளக் கூடும் என அஞ்சி முகாங்களை விட்டு ஓடி மறைந்து விட்டார்களாம்.

சென்ற மார்ச் 2 ஆம் திகதி வடக்கு - கிழக்கு ஆளுனர் பெருமாளைச் சந்தித்த சமயம் தான் மாகாணசபையிலிருந்து இதுவரை சட்ட ஒழுங்குப்படி ராஜினாமாச் செய்யவில்லை என்றாலும், தான் மேற்கொண்டும் முதலமைச்சர் பதவியில் இல்லை என்றும், தானும் தமது மாகாணசபை உறுப்பினர்களும் தேசிய ஈழக் குடியரசின் அங்கத்தினர் என்றும் பெருமாள் கூறினார்.

வேலைக்குப் போகவில்லை. அரசாங்க அதிபர் கச்சேரியில் வேலை செய்து தற்பொழுது வேலைக்குப் போகாதுள்ள அனைத்து ஊழியர்களும் நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுள் வேலைக்குத் திரும்ப வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார். இக்கால அவகாசத்தில் வேலைக்குத் திரும்பாதவர்கள் தங்கள் வேலைகளை இழந்தவர்களாகக் கருதப்படுவர் என அவர் தெரிவித்தார்.

## கசிப்பை ஒழிக்க நடவடிக்கை

(புங்குடுதீவு)

தெங்கு பனம்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின 'புங்குடுதீவு கிளை' இப் பகுதியில் கசிப்பு உற்பத்தியை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கசிப்பு உற்பத்தியினால் சீவல் தொழிலாளிகளின் வருமானம் பாதிக்கப்படுவதுடன் அவர்களின் குடும்பங்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அத்துடன் கசிப்பை பாவிக்கும் குடிகாரரினால் வீதிகளில் ஏற்படும் வீண் சண்டை சச்சரவுகள் போன்ற தொல்லைகளைப் பற்றி பொதுமக்களின் புகார்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிய வருகிறது. (22)

### தனியார்...:

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

- ★ கூட்டுறவு திணைக்களம் சட்டதிட்டங்களை உடனடியாக தீவிரமாக அமுல் செய்யவேண்டும்.
- ★ போனஸ் வாங்கும்போது கட்டாயம் ஊழியர் நலன் பேணப்படவேண்டும். குறைந்தது பத்துவீதமாவது அவர்களுக்கு ஒதுக்க வேண்டும்.
- ★ சங்கங்கள் மேற்பார்வையாளர்களை உடன் நியமித்து சங்கத்துக்கு விரோதமான நடவடிக்கை நிறுத்த வேண்டும் இதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதேச பொறுப்பாளர்கள் ஆலோசனை வழங்குவர்.
- ★ முகாமையாளர் கணக்காய்ளர் பதில் பதவிகளை உடன் நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேறகொள்ளப்பட வேண்டும்
- ★ தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படவேண்டும் இவ்வாறு அக்கூட்டத்தில் முன்னோடியாக அறிவுறுத்தப்பட்டு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(லோ)

சுதந்திரமாகத் தென்பட்டாலும் மக்களால் தமக்கு எந்நேரத்தில் என்ன நடக்குமோ என்று புரியாத நிலை இருக்கின்ற தருணத்தில் நாம் சிவில் நிர்வாகம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். ஆகவே ஸ்தாபனங்களாக சென்று அவற்றின் மூலமாக இந்த சமூகத்தை சீர் செய்யவேண்டிய நிலைக்கு நாம் உள்ளாக்கப்பட்டுள்ளோம்.

மேலும் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடந்துவரும் இன்றைய காலகட்டத்தில் இலங்கை அரசுமீது நம்பிக்கை வைத்தோ அல்லது இலங்கை அரசு மனம் மாறிவிட்டது என்றோ அல்லது அது தமிழர் நலனில் புதிய அக்கறை கொண்டுள்ளது என்று நாம் எண்ணியோ நாம் பேச்சுவார்த்தைக்கு செல்லவில்லை அப்படி எவரும் எண்ணிவிடக்கூடாது.

இலங்கை அரசு நாம் பலவீனமாய் இருந்த நேரத்தில் எம்மீது ராணுவ பலத்துடன் தாக்கியது ஆனால் இப்போது நாம் உலகில் பிரபல்யம் மிக்க ஓர் மக்கள் ராணுவ சக்தியாக மாறிவிட்ட நிலையில் எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளது. அதாவது இலங்கை அரசு எம்முடன் பேச்சுவார்த்தை செய்கின்றதென்றால் அதற்கு முதற்காரணம் எமது ராணுவ பலமே. எம்முடைய இந்தப் பலத்தை மேலும் மேலும் பெருக்குவதில் எம்மாலான அனைத்தையும் நாம் செய்ய வேண்டும், மக்களை ஓர் கட்டுப்பாடான ராணுவ கட்டமைப்பிற்குள் கொண்டுவர வேண்டும் அதற்கு தொழிற்சங்கங்களின் உதவி இன்றியமையாது. என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இலங்கை அரசு நாம் பலவீனமான நிலையை அடையும் வரை பார்த்திருக்கிறது. இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலிலோ அல்லது தமிழ் தேசிய ராணுவத்துடன் ஆற்றப்பட்ட மோதலிலோ நாம் பலவீனமடைவோம் என எதிர்பார்த்திருந்தது ஆனால் எமது பலத்தைக் கண்டு உலகமே வியப்புற்றிருக்கிறது.

ஆகவே எங்களுடைய முழுப்பலமும் எங்களுடைய ஆயுதம் தான் என்பது தெட்டத் தெளிவாக புலப்படுகிறது.

ஆகவே நாம் ஒவ்வொருவரும் அடிப்படை பாதுகாப்பு பற்றி தெரிந்துணரவேண்டும் இதற்கு எம்மாலான சகல ஒத்துளைப்புகளும் உங்களுக்கு உண்டு என அவர் உறுதி யளித்தார்.

(லோ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.